Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 157, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை (16.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 350
















# சமஷ்டி ஆட்சிமுறை சுவிஸ் வலியுறுத்து

26 மாநிலங்களும் சுயமாக அதிகாரங்களைக் கொண்டு தாமே நிர்வகிக்கும் சமஷ்டி ஆட்சிமுறை சுவிஸில் நடைமுறையில் உள்ளது. அதேபோன்று இலங்கையிலும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அவை தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் சமஷ்டி ஆட்சி முறையை நடைமுறைக்கு கொண்டுவருவதே இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான தான தீர்வாக அமையுமெனவும் இத்தகைய ஆட்சி முறையை கொண்டுவர சகல இனங்களும் பேச்சு நடத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதனையே இலங்கைக்கும் தெரிவித்து வருகின்றோம். என சுவிஸ் நாட்டின் அரசியல் விவகார அமைச்சைச் சேர்ந்த பொருளாதார அபிவிருத்தி அதிகாரி தமினானோ சுடே தமாத்தி தெரிவித்தார். காணாமல் போனோர் சர்வதேச தினத்தை முன்னிட்டு சுவிஸ் தலைநகர் பேர்னில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையில் போருக்குப் பின்னர் மீள் குடியமர்வு, அபிவிருத்தி என்பன முன்னெடுக்கப்படுகின்றன. சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் அதற்குத தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது. தற்சமயம் அங்குள்ள நிலைமை முன்னேற்றகரமாக இருப்பதாக எமது தூதரகம் ஊடாக நாம் அறிந்துள்ளோம்.

அந்த நாட்டின் ஸ்திரத் தன்மைக்கு உடன் இரண்டு விடயங்கள் பூர்த்தியாக வேண்டும். ஒன்று நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தி அந்த நாட்டில் நல்லிணக்கத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதியமைச்சர் பதவி; மீளவும் அரசுடன் பேச்சு

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பிரதியமைச்சர் பதவியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் மீண்டும் பிரதியமைச்சர் பதவியை பெறறுக்கொள்வதற்காக அரசாங்கத் துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள் இடையில் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். ஹாரிஸ் தெரிவித்துள்ளார். கூட்டுறவு மற்றும் வர்த்தகத் துறை பிரதியமைச்சராகப் பதவி வகித்த சேகு தாவூத், மாகாண சபைத் தேர்தலில் பிரசாரத்தில் ஈடுபடும் நோக்கில் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கிழக்கில் தேசிய அரசு ஜனாதிபதியுடன் பேசத் தயார்

### கூட்டமைப்பு அறிவிப்பு



கிழக்கு மாகாணசபையில் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அரசாங்கம் பேச்சு நடத்தினால் அது குறித்துப் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

தேர்தல் முடிவடைந்து ஒருவாரம் கழித்து உங்களை சந்தித்திருக்கிறோம். இன்று பல ஊகங்கள் நிலவி வருகின்றன. அதில் ஒன்றுதான் கிழக்கில் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பான பேச்சுக்கள். இதுபற்றி கதைக்கும் அதிகாரம் உடையவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மட்டுமே. அவர் இவ்விடயம் தொடர்பில் எங்களுடன் பேசினால் அதுபற்றி நிச்சயமாக நாங்கள் தட்டிக்கழிக்காமல் பரிசீலிப்போம். ஜனாதிபதி தவிர வேறு யாராவது இதுபற்றி பேசினால் அதற்கு நாங்கள் செவிசாய்க்க மாட்டோம். ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்விடயம் தொடர்பில் இதுவரை எங்களுடன் பேசவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் பதவிகளுக்கு ஆசைப்பட்டு அடிபணியாது. அப்படி

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம்

### அரசாங்கம் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் உள்ளிட்ட ஏனைய பதவிகள் குறித்து நாளையதினம் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் ஆரம்பகட்ட இணக்கத்திற்கு வந்துள்ளதாக முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பின்னர் முதலமைச்சர் உள்ளிட்ட ஐந்து மாகாண அமைச்சின் பொறுப்புக்களுக்கான பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாகாண சபை தவிசாளர் மற்றும் உதவி தவிசாளர் பதவிகள் குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளது. இந்தப் பதவிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கலந்துரையாடி, இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போதல், சாட்சிகளின் பாதுகாப்பு ஐ.நா. மனித உரிமை அதிகாரிகள் ஆராய்வு

சாட்சிகளின் பாதுகாப்பு மற்றும் காணாமற் போதல்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் கலந்துரையாடியுள்ளனர். ஹன்னி மெகாலி மற்றும் ஒஸ்கார் சொலேரா ஆகிய மேற்படி அதிகாரிகள் இருவரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளை நேற்று முன்தினம் காலை சந்தித்தனர்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அமுலாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு நவநீதம்பிள்ளையின், அலுவலக அதிகாரிகள் வந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம கூறினார்.

சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தை மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மேற்படி அதிகாரிகளுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## போலி நகைகளை அடைவு வைத்து இலங்கை வங்கியில் பண மோசடி

(யாழ்ப்பாணம்)


இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையில் போலி நகைகளை அடைவு வைத்து நான்கு இலட்சத்து 94 ஆயிரம் ரூபா பணம் பெற்று மோசடியில் ஈடுபட்ட சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் பிரிவில் கடந்த வாரம் முறைப்பாடு ஒன்று குறித்த வங்கியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வங்கியின் கிளையில் நபர் ஒருவர் கடந்த மாதம் 25 ஆம் திகதி ஒரு தொகுதி நகைகளை அடைவு வைத்துப் பணத்தினைப் பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த வங்கியினர் கடந்த 7 ஆம் திகதி நகைகளைப் பரீட்சித்துப் பார்த்த

19 ஆம் பக்கம் பார்க்க

## சாட்டி கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய ஆணின் சடலம்



(வேலணை)

வேலணை சாட்டி கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது. நேற்று மாலை 5.30 மணியளவில் குறித்த கடற்கரைப் பகுதியில் கறுப்புநிற உள்ளாடை, கடும சிவப்பு நிற சேட்டுடன் இந்தச் சடலம் கரை ஒதுங்கியது.

குறித்த இடத்திற்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதவான் மகேந்திரராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# 12 சங்கீத பாட ஆசிரியர்கள் வடக்கிற்கு உள்வாங்கப்பட்டனர்





(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கென சங்கீத ஆசிரியர் 12 பேர் நியமனம் பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் வைத்து இவர்களுக்கான நியமனங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

வடபகுதியைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட 12 ஆசிரியர்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் நியமனம் கிடைத்த போதிலும் அங்கு தாம் கடமையாற்றுவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாகவும் அந்நியமனங்களை வடமாகாணத்திற்கு மாற்றித் தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கையினை முன்வைத்தனர். இந்நிலையில், கிழக்கு மாகாணத்தில் இவர்களுக்கான நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த நிலையில் விசேட அமைச்சரவைப் பத்திரம் மூலம் வடமாகாணத்திற்கெனப் புதிதாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாகக் குறிப்பிட்ட 12 சங்கீத ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் தீவகக் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனப் பத்திரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உள்ளிட்டோர் வழங்கிவைத்தனர்.

## பரிசளிப்பு விழாவும், மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவும், கலைச்சுடர் மலர் வெளியீடும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத்தின் தலைவர் சி.சிவரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பேராசிரியர் பி.சிவநாதன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை மற்றும் இரா. செல்வவடிவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே, ஆர்வலர்கள் அனைவரையும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுள்ளனர். (135)

# இடமாற்றம் வேண்டுமா? விண்ணப்பிக்க முடியும்

(திருநெல்வேலி)

சகல மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்திப் பகுதி பனை தென்னை வளப் பகுதி கணக்காய்வுப் பகுதி போன்ற உத்தியோகத்தர்களுக்கான 2013ஆம் ஆண்டு இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரே அலுவலகத்தில் 5 வருட சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் கட்டாயமாக இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. 2 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் விரும்பினால் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்க முடியும்.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கிடையில் இடமாற்றம் கோரி விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (137)


## அறிவித்தல்

2012.06.16 வரையும் வைத்திய பணிப்பாளராக சென்றல் நர்ஸிங் கோமில் பல வருடங்களாகக் கடமை ஆற்றிய வைத்திய கலாநிதி

**Dr.R. தெய்வேந்திரன்**

தற்சமயம் எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்

காலை 9.00 மணி - 1.00 மணி வரையும்

மாலை 3.30 மணி - 5.30 மணி வரையும்

நோயாளர்களைப் பார்வையிடுவார்

T.P.No- 021 221 9332
021 459 1202

நிர்வாகம்,
புதிய யாழ்.வைத்தியசாலை,
வெளிநோயாளர் பிரிவு,
335, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

(C/2002)



786

அஸ்ஸலாமு அலைக்கும்
வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு

# அனைத்து உறவுகளும் இன்று கைகோர்க்கும் இடம் சாட்டி

அன்புடையீர்!

கடந்த 22 வருடங்களின் பின்னர் சாட்டி மண்கும்பான் சங்கைக்குரிய சுல்தான் அப்துல் காதர் வலியுள்ளாஹ் அவர்களின் ஞாபகார்த்த கந்தூரி நிகழ்வு ஹிஜ்றி (1433 ஷவ்வால் பிறை 28) 16.09.2012 ஞாயிற்றுக்கிழமை யாழ்.மண்கும்பான் பிரதேசவாசிகளால் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்பமாக காலை 10.00 மணிக்கு குர்ஆன் தமாமும் அதனைத் தொடர்ந்து நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் வேண்டி துவாபிரார்த்தனையும், பகல் 12.30 மணிக்கு கந்தூரி நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகி இருப்பதால் இன்ஷாஅல்லாஹ் சகல பள்ளிவாசல் நிர்வாகத்தினரும், ஊர் பிரமுகர்களும், அனைத்துப் பொதுமக்களும், நலன்விரும்பிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
யாழ்/மண்கும்பான்
கந்தூரி ஏற்பாட்டுக் குழுவினர்.

(C/1725)

# துணுக்காய் செல்ல வேண்டுமாயின் மாங்குளத்தில் 3 மணிநேரம் தவம்

(துணுக்காய்)

துணுக்காய், பாண்டியன் குளம், நண்டாங்கண்டல் மற்றும் மல்லாவிப் பிரதேசங்களுக்கு செல்வதற்காக மாங்குளம் சந்தியில் மூன்று மணிநேரத்திற்கும் மேலாக பயணிகள் காத்திருக்கும் அவலம் ஏற்படுகின்றது. சனி, ஞாயிறு தினங்களில் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக பேருந்திற்காக காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

தனியார் கல்விநிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் அங்கு சேவையாற்றச் செல்லும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் சனி, ஞாயிறு தினங்களில் குறித்த பிரதேசங்களுக்கு செல்வதற்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இந்த அவல நிலையை போக்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் இப்பிரதேசங்களுக்கு இதுவரையில் அரச பேருந்து சேவையில் ஈடுபடாமல் இருப்பது ஏன் என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இப்பிரதேசங்களில் சேவையாற்றிச் செல்லும் வெளிமாவட்ட ஊழியர்கள் உரியநேரத்திற்கு செல்ல முடியாமைக்கு காரணம் போக்குவரத்து சீராக நடைபெறாமையே என உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (148)



சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் அண்மையில் நிறுவுநர் நினைவுநாளும் நினைவுப் பேருரையும் இடம்பெற்றது. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரை வழங்குவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# கிளிநொச்சியில் பழமரச் செய்கை 100 பேருக்கு பப்பாசிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பழமர உற்பத்திகளை மேம்படுத்தும் வகையில் பொருளாதார அமைச்சின் நிதி பங்களிப்புடன் பல்வேறு பழமரச் செய்கை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் கடந்த 3ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 100 பயனாளிகளுக்கு பப்பாசிக் கன்று விநியோகம் இடம் பெற்றதாக விவசாய விரிவாக்க உதவி பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி புன்னை நீராவி பகுதியில் 50 பயனாளிகளுக்கும், புதுமுறிப்பு பகுதியில் 20 பயனாளிகளுக்கும், இராமநாதபுரம் பகுதியில் 30 பயனாளிகளுக்கும் இவ்வாறு பப்பாசிக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக விவசாய விரிவாக்க அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்திய அரசின் உதவியின் கீழ் கிளிநொச்சி அறிவியல் சேர் பகுதியில் உள்ள இந்திய வீட்டுத்திட்டத்தின் 63 பயனாளிகளுக்கு பழமரக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (28)

# ஆட்டுக்கடாவுக்கு சொந்தக்காரர் யார்?

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பொலிஸ நிலையத்திலுள்ள யமுனாபாரி இன ஆட்டுக்கடாவினை உரிமையாளர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த எட்டாம் திகதி சனிக்கிழமை வல்வெட்டித்துறை கொற்றாவத்தை ஜரியப்புலம் பகுதியில் இரவு 11.30 மணியளவில் பொலிஸார் ரோந்தில் ஈடுபட்டனர். இதன் போது மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் பொலிஸாரைக் கண்டவுடன் வந்தவழியே மீளவும் மோட்டார்சைக்கிளை திருப்பிச் சென்றவேளை மோட்டார் சைக்கிளில் கொண்டு வரப்பட்ட குறித்த ஆடு அப்பகுதியில் விழுந்துள்ளது. இதனை அவதானித்த பொலிஸ் ஆட்டுக்கடாவை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று பராமரித்து வருகின்றனர்.

அப்பகுதிகளில் அண்மைக்காலமாக ஆடுகள் திருடப்படும் சம்பவம் அதிகரித்துக் காணப்படும் நிலையில் பொலிஸ் நிலையத்திலுள்ள குறித்த ஆட்டுக்கடாவை இவர் பார்வையிட்ட போதும் அதனை உரிமை கொண்டாடவில்லை.

எனவே ஆட்டுக்கடா உரிமையாளர் வந்து அடையாளம் காட்டி அதனைப் பெற்றுச் செல்லுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (116)

# "மணி ஓசை" சஞ்சிகை சாவகச்சேரியில் வெளியீடு

(சாவகச்சேரி)

மணி ஓசை எனும் தகல் இலக்கிய சமய சஞ்சிகை வெளியீட்டு விழா கடந்த 12ஆம் திகதி சாவகச்சேரி ஐங்கரன் மண்டபத்தில் மாலை 3 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் கலந்து கொண்டார். இச் சஞ்சிகையை டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் வெளியிட்டு வைக்க சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கயிலாயம்பிள்ளை பெற்றுக் கொண்டார்.

மணி ஓசை இதழானது கலை இலக்கிய சமய சஞ்சிகையாக வெளிவருவதோடு நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், சுவாரசிய நிகழ்வுகள் அதிசய வரலாறுகள் துணுக்குகள் உசுவ விடயங்கள் என தொடர்ந்து மாத இதழாக வெளிவர இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

கோப்பாய் திருக்குறள் மன்றத்தின் பொதுக்கூட்டம் இன்று காலை கோப்பாய் நாவலர் தமிழ்வித்தியாலய மண்டபத்தில் த.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் புதியநிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதாக அறிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச கூட்டுறவுத் தின போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 90 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு சமாச மண்டபத்தில் கடந்த ஒகஸ்ட் மாதம் 20ஆம், 22 ஆம் திகதிகளில் அங்கத்தவர், பணியாளர், மகளிர்குழு உறுப்பினர்களுக்கான பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளும், முன் பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் மனனப்போட்டி, குழுநடனப் போட்டி என்பனவும் நடத்தப்பட்டன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

திருக்குறள் மனனப் போட்டி,

கலந்துகொண்ட சிறார்களின் விபரம்,

பாரதி முன்பள்ளி(சுன்னாகம்) அ.அஸ்வின், சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி(சாவகச்சேரி) அநுனாயினி, ஜெ.ஜெனிஸ்ரா, கிராம அபிவிருத்தி முன்பள்ளி (பண்டத்தரிப்பு) கொ.டிலக்சியா, திருவள்ளுவர் முன்பள்ளி (தெல்லிப்பளை) ச.பவியரசி, ஐக்கிய வாலிபர் முன்பள்ளி (தெல்லிப்பளை) யோ.ரேன்சனா, காந்திஜீ முன்பள்ளி(சங்கானை) வி.நியான்சி, நீதவான் முன்பள்ளி(சங்கானை) லி.சனுஸ்ரன், பரணி முன்பள்ளி(தென்.கொத்) தி.சுமிதா, ரண்டா முன்பள்ளி (தென்.கொத்) சி.டினுஷா, கதிரொளி முன்பள்ளி(அச்சுவேலி) க.திலக்சிகா, கொடிகாமம் தெற்கு ப.பாலர் முன்பள்ளி (கொடி.) சு.நிருசா, மந்துவில் பா.ப.முன்பள்ளி(கொடிகாமம்) ஜெ.லக்சியா, சிறிகாளி அம்பாள் முன்பள்ளி (கோண்டாவில்) ஸ்ரீ.லவிஜனா, சிறி புவனேஸ்வரி அம்பாள் முன்பள்ளி(கோண்டாவில்) மு.கஸ்மிகா, மதிஒளி முன்பள்ளி(மானிப்பாய்) ந.லவநிதா, பேரம்பலம் முன்பள்ளி (காரை. நகர்) கேதனுசியன், கேதீஜூஜன்.

இவர்களில் திருக்குறள் மனனப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம்,

ச.பவியரசி, க.அஸ்வினி, ந.லவநிதா

குழு நடனப்போட்டி,

இதில் 5 சங்கங்களைச் சேர்ந்த முன்பள்ளி சிறார்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற முன்பள்ளிகளின் விபரம் வருமாறு,

சிறீ அம்பாள் முன்பள்ளி (மானிப்பாய்), அண்ணா முன்பள்ளி(கோண்டாவில்), பேரம்பலம் முன்பள்ளி (காரை நகர்). (54)

## யாழ்.நகரமத்தியில் கள்ளச்சாராயம் பொலிஸாரிடம் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ் தனியார் பேருந்து நிலையப்பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் வைத்திருந்த நபர் ஒருவரை நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். இந்தப்பகுதியில் பாவனை செய்யப்பட்ட வெற்று மதுபானப் போத்தல்களில் மதுபானம் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து மூன்றே முக்கால் போத்தல் சட்டவிரோத மதுபானம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. குறித்த நபர் யாழ்.நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (பா,இ)



பல வருடங்களாக இயங்காமல் இருந்து வந்த மாதர்கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு திருநெல்வேலி ஜே/114 கம்பன் சனசமூக நிலைய மண்டபத்தில் நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவருமான அ.இரவீந்திரதாசன் தலைமையில் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டதையும், கலந்து கொண்ட மக்களையும் காணலாம்.

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வாழ்வு ஏன் இப்படி இருக்கிறது?

இங்கே எல்லாம் சரியாக இருக்கிறது; நாம் சரியாக இருக்கிறோம்; சரியான முறைப்படிதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அடித்துச் சொல்ல முற்படுகிறவர்கள் குறித்து சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது. எல்லாம் சரியாக இருந்தால், ஏன் இத்தனை துன்பம்? ஏன் இத்தனை ஏற்றத்தாழ்வு? ஏன் இத்தனை இழிவுபடுத்தல்கள்? ஏன் பலர் வாடச் சிலர் வாழும் நிலைமை? நாளும் பொழுதும் நாம் பார்க்கும் கேட்கும் சமூக வக்கிரங்கள் கொஞ்சமா?

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாம் ஒவ்வொருவருமே குற்றம் செய்பவர்களாகவோ அல்லது குற்றத்திற்குத் தூண்டுபவர்களாகவோ தானே வாழ வேண்டியிருக்கிறது? நாம் சாப்பிடுவதென்பது, உலகில் எங்கெங்கோ பல்லாயிரம் பேர் பட்டினியால் செத்துக் கொண்டிருப்பவர்களின் உணவைத் திருடியதாகத்தானே இருக்கிறது? நாம் நாளுக்கொன்றாக உடுத்தும் ஆடைகள் கூட, உடுதுணி வாங்க முடியாத, குளிருக்குப் போர்த்திக்கொள்ளத் துண்டில்லாத பல்லாயிரம் மனிதர்கள் இருக்க, நாம் அணிந்துகொள்வதாகத்தானே இருக்கிறது? நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதுகூட, எங்கெங்கோ பலர் வறுமையாலும் வன்முறையாலும் வாழமுடியாமல் செத்துக்கொண்டிருக்க நாம் இருப்பதாகத்தானே இருக்கிறது?

ஆக, இந்த சமூகம், கலாசாரம், ஆட்சி, நாம், நமது 'வாழ்க்கைமுறை எதுவும் இங்கு சரியாக இல்லை' என்பதிலிருந்துதான் நாம் தொடங்க வேண்டியிருக்கிறது. இன்றிருக்கும் இந்தச் சமூக அமைப்புமுறை, ஒழுக்கவிதிகள், பழக்கவழக்கங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நாம் நடக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் இந்த அமைப்பின் தர்மமாக ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும்தான் தொடர்ச்சியாக இருக்கிறதெனில் நாம் என்ன செய்வது?

நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருப்பதற்கான அதிகாரத்துக்காகவே எல்லோரும் ஆலாய்ப் பறக்கிறார்கள். எல்லா வித்தியாசங்களுக்கும் அப்பால் நாம் எல்லோருமே மனிதர்கள்தானே? அப்படி இருக்க, இந்தப் பாகுபாடுகள் இழிவுபடுத்தல்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன? கலாசாரத்திலிருந்தா, மரபிலிருந்தா, மொழியிலிருந்தா, மத நம்பிக்கைகளிலிருந்தா, சொத்திலிருந்தா, அதிகாரத்திலிருந்தா, நாம் கேட்டு வளர்ந்த கதைகளிலிருந்தா...

நாம் ஒருவரையொருவர் தாழ்த்தவும், கீழ்ப்படுத்திவிடவும், விளிம்புநிலைக்குத் தள்ளி அப்படித் தள்ளிவிடப்பட்டவர்கள் துன்புறுவதும் துயர் சுமப்பதும் குறைமனிதர்களாய் சிதைந்தழிவதும் தவிர்க்க முடியாததுதான் – கண்டுகொள்ள முடியாது; உலகநியதி இது; நாம் நம் பாட்டைப் பார்த்துப் போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான் – என்ற குற்றமற்ற மனோநிலையை எவ்வாறு உருவாக்கிக் கொண்டோம்? சமமற்ற மனிதர்களாகவே வாழ்வதில் எவ்வாறு சமாதானமடைந்து கொண்டோம்?

இந்த வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது? மற்றவர் பற்றியும் அவரை நாமும்தான் தாழ்த்துகிறோம் என்பது பற்றியும் கவலையே படாது சென்றுகொண்டிருக்கும் மனநிலை எப்படிச் சாத்தியமாகிற்று?

கேள்விகளுக்கு விடை காணாதவரை இந்தச் சமூக அமைப்புக் குறித்துத் திருப்தியடைய ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

கஷ்டப்பட்டுக் கொண்டிருப்போரின் வாழ்க்கை பற்றிக் கவலைப்படாமல் மற்ற சிலர் வாழ்வதற்கு... என்ன தர்மநியாயங்களும் கனவுகளும் ஏமாற்றுக்களும் தேவையோ அவையெல்லாம்தான் சமூக நியதிகளாகவும் விதிகளாகவும் அரசியலாகவும் வெற்றிகளாகவும் இங்கு சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும்!

- ஆசிரியர்

# வடக்கில் அனர்த்தங்களை எதிர்கொள்வது எப்படி?

வடக்கில் அனர்த்தம் ஏற்பட்டால் அதை எப்படி எதிர்கொள்வது என்பதற்காக யாழ். அனர்த்த முகாமைத்துவப்பிரிவு விசேட செயற்திட்டங்களைத் தயாரித்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக அனர்த்த முகாமைத்துவ வரைபடம் தயாரிப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த அனர்த்த முகாமைத்துவ வரைபடம் தயாரிப்பதற்காக ஏற்கனவே இருகட்டங்களாக அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்டது. இறுதிக்கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக சமூகமட்ட அமைப்புக்களிட்மும் உதவி கோரப்பட்டிருக்கிறது. இந்த வரைபடத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் அனர்த்தங்களைத் தடுப்பதற்கான செயற்திட்டங்கள் தயாரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# கள்ள மரத்தைக் கொள்வனவு செய்வோர் அதிக அபராதம் செலுத்த நேரிடும்

## கிளி, மரக்கூட்டுத்தாபன முகாமையாளர் ரமேஷ் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

காடுகளில் வெட்டப்படும் மரங்களை மக்கள் பாவனைக்குப் பெறுவதனால் இந்த மரங்கள் வன வள அதிகாரிகளினாலோ அல்லது பொலிஸாரினாலோ கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் பெறப் படும் மரங்களின் தொகையைவிட அதிக தொகையான ரூபாய்களை நீதிமன்றுக்கு செலுத்த வேண்டிய நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

எனவே களவாகக் கொண்டுவரப்படுகின்ற மரங்களை மக்கள் பாவனைக்குப் பெறாது விழிப்பாக செயற்பட வேண்டும் என இலங்கை மரக் கூட்டுத் தாபனத்தின் கிளிநொச்சி பிரதேச முகாமையாளர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

தற்போது கிளிநொச்சியில் மரக்கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனூடாக மக்களுக்கான சேவைகள் செய்ய கூட்டுத் தாபனம் தயாராக இருக்கிறது. மாதாந்தம் கிளிநொச்சி சாலையிலிருந்து மரங்கள் ஏல விற்பனை விலைக்கழிவுடன் நடைபெறுகின்றது.

கடந்த வருடம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டுத்தாபனம் வீதிப்புனரமைப்பு, மின் இணைப்பு போன்ற பணிகளுக்கு என்று வெட்டப்பட்ட அதிக மரங்களை மாதாந்தம் ஏல விற்பனையில் விடுகின்றது. இதன் சேவையை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (28)

# மல்லாவிக் கிணறுகளுக்கு பௌசர் மூலம் தண்ணீர்

(மல்லாவி)

மல்லாவிப்பகுதியில் தண்ணீருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்குவதற்காக பாடசாலை கிணறுகளுக்கு பிரதேசசபை பௌவுசர்கள் மூலம் கிணற்றுக்குள் தண்ணீர் விடப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

மல்லாவியில் நீர்ப்பற்றாக்குறையால் பாடசாலை மாணவர்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து சென்று விடுதிகளில் தங்கி சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் மல்லாவி, துணுக்காய், மாங்குளம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் பிரதேசங்களில் போத்தலில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் நீரையே, பெருமளவில் மக்கள் வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. (148)

# கிளிநொச்சி ஏ - 9 பிரதான பாதையில் மஞ்சள் கோடுகளின்றி மாணவர்கள் அவலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் திருத்தப்பட்ட ஏ - 9 நெடுஞ்சாலைப் பகுதிகளில் மஞ்சள் கடவை கோடுகள் இல்லாத நிலையில் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் பிரதான பாடசாலைகள் சில ஏ - 9 நெடுஞ்சாலையின் அருகிலேயே இருக்கின்றன. இதனைவிடவும் அரச அலுவலகங்களும் ஏ - 9 வீதிக்கு அருகிலேயே இருக்கின்றன.

ஏ - 9 வீதியில் அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்துக்கள் காரணமாக பாதசாரிகளும், மாணவர்களும் சிரமங்கள் பலவற்றை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (28)

# 770 இலக்க பேருந்து சேவையை அதிகரிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

770 இலக்க பேருந்து சேவையை அதிகரிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதியூடாக ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டிப் பகுதிக்கு பயணிகள் சேவையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

1990களுக்கு முன்னர் மூன்று பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன தற்போது ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபட்டுவருவதால் பொதுமக்கள் போக்குவரத்து செய்வதற்காக நீண்டதூரம் நடந்து மல்லாகம், புன்னாலைகட்டுவன் சந்தி போன்ற பகுதிகளுக்கு செல்லவேண்டியுள்ளது.

காலை 7.00 மணிக்கு குப்பிளானில் இருந்து யாழ்.சாவகச்சேரி வரையான சேவையில் பாடசாலை மாணவர்களே அதிகளவில் செல்வதால் பொதுமக்கள் ஏனைய ஊழியர்கள் பயணிக்க முடியாத சூழல் காணப்படுகிறது.

வாரநாட்களில் காலை வேளையில் குப்பிளானில் இருந்து இன்னொரு பேருந்து சேவையையும் ஆரம்பிக்குமாறு பொது மக்கள் கோருகின்றனர். அத்துடன் தொடர்ச்சியாக நடைபெறும் ஏனைய சேவைகளையும் யாழ். கச்சேரி வரை நீடிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (148)

# முள்ளிப்பாலத்தை திரும்பிப் பார்ப்பார்களா?

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதி முள்ளிப் பாலம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்பாலம் வரப்போகும் மழைக் காலத்தில் தாக்குப்பிடிக்கமுடியாத நிலையில் உள்ளது. தற்போது புனரமைப்பு வேலைகள் செய்யாத நிலையில் கொடிகாமம், பருத்தித்துறை போக்குவரத்து மாரி காலத்தில் நிச்சயம் தடைப்படும் அபாயம் இருக்கின்றது.

மழை ஆரம்பிப்பதற்கு முன்பு இந்தப் பால வேலைகளை திருததம் செய்து போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் வாகனங்களும், பிரயாணிகளும் பயணிக்கக் கூடியவாறு சம்பந்தப் பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

சங்கர சிவன்

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பது உறுதியாகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை எதிர்பார்த்து ஆட்சி அமைப்பதற்கான உரிமைக் கோரிக்கையை விடுத்தமை அரசியல் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாத செயல். தமிழ்த் தேசியத்துக்கும் தங்களுக்கும் ஒத்துவுராது என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் தேர்தல் பிரசாரத்தின்போதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்த வரையில் ஒரு முடிவுக்கு வருவது அவ்வளவு இலகுவானதாக இல்லாதபோதிலும், இந்த முடிவைத் தவிர வேறு முடிவுக்கு அது வந்திருக்க இயலாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் பங்காளிக் கட்சியாக இருந்துகொண்டு மாகாணத்தில் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பது அரசியல் நாகரிகத்துக்கு ஒவ்வாத செயல்.

மாகக் கூறுவது சிறுபிள்ளைத்தனமானது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் எப்படி வாக்களித்தார்களோ அதேபோலவே இதற்கு முன் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற தேர்தல்களிலும் வாக்களித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு தேர்தலில் ஒவ்வொரு கோரிக்கையை ஆதரித்து வாக்களித்திருக்கின்றார்கள். சமஷ்டிக்கு ஆதரவாகவும் வாக்களித்தார்கள். தனிநாட்டுக்கு ஆதரவாகவும் வாக்களித்தார்கள். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுக்கு ஆதரவாகவும் வாக்களித்தார்கள். சர்வதேச சமூகத்தின் மூலம் தீர்வைப் பெற்றுத் தரப்போவதாக ஒவ்வொரு பிரசார மேடையிலும் கூட்டமைப்பு அளித்த வாக்குறுதிக்கு ஆதரவாக இப்போது வாக்களித்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில், ஏதேனுமொரு குறிப்பிட்ட கொள்கைக்குத் தமிழ் மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள் எனக் கூறுவது தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குச் சாதகமாகக் கற்பித்துக் கொள்ளும் கற்பனை.

தமிழ் மக்கள் இந்த ஆணையை வழங்கிக்கொண்டிருப்பார்கள் என்பதால், இனப்பிரச்சினை தீராமலிருப்பதே அரசியலில் தாங்கள் நிலைத்து நிற்பதற்கு வாய்ப்பானது என்ற எண்ணத்தில் இத்தலைவர்கள் செயற்பட்டிருக்கின்றார்கள் போல் தெரிகின்றது. பிரச்சினையின் தீர்வுக்காக ஒரு தேர்தலில் ஒரு கொள்கையை முன்வைப்பதும் அடுத்த தேர்தலில் வேறொரு கொள்கையை முன்வைப்பதும் இத்தலைவர்களின் அரசியல் விளையாட்டு.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையில் ஆட்சி அமைக்க விரும்புவதற்கு இரண்டு நோக்கங்கள் அடிப்படையானவையாக இருத்தல் வேண்டும். அரசியல் தீர்வு முயற்சியின் ஆரம்ப கட்டமாக மாகாண சபையை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து படிப்படியாக அரசியல் தீர்வை அடைவது ஒரு நோக்கம். மாகாணத்தை அபிவிருத்தி செய்வது மற்றைய நோக்கம். இந்த இரண்டு நோக்கங்கள் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூட்டமைப்புத் தலைவர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது பேசவில்லை. தமிழ் மக்கள் தங்களுடனேயே நிற்கின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டவே தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறினார்கள். அப்படியிருக்க ஆட்சி அமைப்பதற்கு ஆலாய்ப்பறந்தது சந்தர்ப்பவாத அரசியலா?**



## அடுத்தடுத்து எல்லாத் தேர்தல்களிலும் வழங்கப்பட்ட


# மக்களாணையை கூட்டமைப்பு மதித்துச் செயற்படவில்லை

தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் சந்தேகத்துக்கு இடமின்றி அரச எதிர்ப்பு வாக்குகள் என்பதால் அந்த மக்களாணையை மீறிச் செயற்படலாமா என்ற கேள்வியும் முஸ்லிம் காங்கிரஸை நோக்கி இருந்தது. அதேநேரம், முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பது முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்கிழக்கும் நிலையைத் தோற்றுவித்துவிடும் என்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன. கூட்டமைப்பைப் புலிகளின் பதிலி அமைப்பாகவே முஸ்லிம்கள் இப்போதும் கருதுவது முதலாவது காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தேர்தல் பிரசாரத்தில் முக்கியத்துவம் அளித்த விடயமான வடக்கு-கிழக்கு இணைப்பு கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு உடன்பாடானதல்ல என்பது மற்றைய காரணம். இந்த நிலையில் கூட்டமைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிப்பது மற்றைய முஸ்லிம் கட்சிகளின் எதிர்ப் பிரசாரத்துக்குத் தீனிபோடுவதாகிவிடும்.

இன்னொரு விடயத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கூடுதலான கவனம் செலுத்த வேண்டியிருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதில் அஷ்ர.்.புக்குப் பிந்திய முஸ்லிம் காங்கிரஸ் ஒவ்வொரு தடவையும் பிளவுபட்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. அத்தகைய நிலைமை இப்போது ஏற்படக்கூடாது என்பதில் கட்சித் தலைமை கவனம் செலுத்தியிருப்பதைத் தற்போதைய தீர்மானத்தில் அவதானிக்க முடிகின்றது.

தமிழ் மக்கள் இத்தேர்தலில் தங்களுக்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் மேலோட்ட

தாங்கள் முகங்கொடுக்கும் சகல நெருக்கடிகளுக்கும் காரணமான இனப்பிரச்சினை தீர்க்கப்படாமலிருப்பதை ஒரு பாதகமான விடயமாகத் தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். இப்பிரச்சினை தீராமலிருப்பதற்குப் பதவியிலுள்ள அரசாங்கமே காரணம் என்று தமிழ்த் தலைவர்கள் கூறுவதை நம்பும் மக்கள் அந்த அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கின்றார்கள். தமிழ் மக்களின் வாக்குகள் அரச எதிர்ப்பு வாக்குகள். சில வருடங்களுக்குப் பின் இன்னொரு தேர்தல் நடக்கும்போதும் இனப்பிரச்சினை தீராமலிருந்தால் அப்போதும் தமிழ் மக்கள் இம் மாதிரியே வாக்களிப்பார்கள்.



ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் அளித்த வாக்குகளின் உண்மையான அர்த்தத்தை விளங்கிக் கொள்வதன் மூலமே அவர்கள் வழங்கிய ஆணை எது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணை. மக்களிடமிருந்து அந்த ஆணையைப் பெற்ற தலைவர்கள் அதை நிறைவேற்றுவதற்கு உருப்படியான முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. இனப்பிரச்சினை தீராமலிருப்பதற்கே இத்தலைவர்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள். இனப்பிரச்சினை இருக்கும் வரை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட முதலாவது தேர்தலில் தனிநாட்டுக் கொள்கையை முன்வைத்தது. அடுத்த தேர்தலில் தனிநாட்டைக் கைவிட்டுவிட்டு ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு பெற்றுத் தரப்போவதாகக் கூறியது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வே தங்கள் நிலைப்பாடு என்று இப்போது நடைபெற்ற தேர்தலில் கூறிய போதிலும் அத்தீர்வைத் தாங்கள் பெற்றுத் தரப்போவதாகக் கூறவில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் சர்வதேச சமூகத்தின் செயற்பாட்டுக்குத் தாங்களே காரணம் என்றும் கூறினார்கள்.

சர்வதேச சமூகத்தின் மூலம் தீர்வைப் பெற்றுத் தரப்போவதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவது தான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாலுள்ள பிரதான பணி. முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்றியதால் ஆட்சி அமைக்க முடியவில்லை எனக் கூறி இந்தப் பொறுப்.பைத் தட்டிக்கழிக்க முடியாது. ஆட்சியைக் கைப்பற்றி மாகாணத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளப்போவதாகக் கூட்டமைப்பு எந்தக் கட்டத்திலும் வாக்குறுதி அளிக்கவில்லை. எனவே, மக்கள் மாகாண அபிவிருத்திக்காகக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவில்லை. அரசியல் தீர்வுக்காகவே வாக்களித்தார்கள். அதையே கூட்டமைப்பிடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கு பற்றிய கூட்டமொன்றில் உரையாற்றிய சம்பந்தன், தமிழ் மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்புக்குப்போதுமான மதிப்புக் கொடுக்கப்படாவிட்டால் அதிகாரப் பகிர்வு மற்றும் ஜனநாயக நடைமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலை ஏற்படலாம் எனக் கூறினார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரளிக்க வேண்டும் என்பதை இப்படிக் கூறினாரோதெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையில் ஆட்சி அமைக்க விரும்புவதற்கு இரண்டு நோக்கங்கள் அடிப்படையானவையாக இருத்தல் வேண்டும். அரசியல் தீர்வு முயற்சியின் ஆரம்ப கட்டமாக மாகாண சபையை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து படிப்படியாக அரசியல் தீர்வை அடைவது ஒரு நோக்கம். மாகாணத்தை அபிவிருத்திசெய்வது மற்றைய நோக்கம். இந்த இரண்டு நோக்கங்கள் பற்றி ஒரு வார்த்தை கூடக் கூட்டமைப்புத் தலைவர்கள் தேர்தல் பிரசாரத்தின்போது பேசவில்லை. தமிழ் மக்கள் தங்களுடனேயே நிற்கின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டவே தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறினார்கள். அப்படியிருக்க ஆட்சி அமைப்பதற்கு ஆலாய்ப் பறந்தது சந்தர்ப்பவாத அரசியலா?

அதிகாரப் பகிர்விலும் ஜனநாயக நடைமுறையிலும் தமிழ் மக்களை நம்பிக்கையிழக்கச் செய்யும்முயற்சியில் கூட்டமைப்புத் தலைவர்களே ஈடுபட்டவர்கள். சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப்பகிர்வு ஆலோசனைகளை நிராகரித்ததும் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்குக் கைகொடுத்ததும் தமிழ் மக்களை அதிகாரப் பகிர்விலும் ஜனநாயக நடைமுறையிலும் நம்பிக்கையிழக்கச் செய்யும் முயற்சி தானே.

# அரசின் சலுகைக்காக ஏங்க வேண்டாம்

## மாகாணசபை உறுப்பினர்களுக்கு அறிவுரை




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாணத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு பல பரிசுகளை வழங்கி, மாகாண சபையில் ஆட்சியை அமைப்பதற்காக அரசாங்கம் முயற்சித்து வருகிறது எனவும் அவற்றுக்கு ஏமாற வேண்டாம் என கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்வதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை உறுப்பினர்களை தனது வீட்டுக்கு அழைத்து, அவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். மாகாண சபையில் ஆட்சியமைக்க அரசாங்கத்திற்கு பெருபான்மை பலம் கிடையாது இதனால், தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு பணத்தைக் கொடுத்து அவர்களைத் தம்பக்கம் இழுக்கும் முயற்சி அரசாங்கத்திடம் உள்ளது.

எங்களுக்கு வயதாகி விட்டது. எதிர்காலத்தில் கட்சி உங்களிடம் ஒப்படைக்கப்படும். கிழக்கு மாகாண மக்கள் வாக்களித்தது, உங்களுக்காக அல்ல கட்சிக்காக, ஐக்கிய தேசியக்கட்சி எம்முடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதால்,, மாகாணத்தின் ஆட்சியை கூட்டமைப்பு கைப்பற்ற முடியும் என மக்கள் கூறுகின்றனர் எனவும் சம்பந்தன் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். சந்திப்பில் மாகாண சபை உறுப்பினர்களும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.



கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்காவின் பாடல்கள் அடங்கிய 'சிதுபதி கவி கீ' எனும் இசைத்தொகுப்பு வெளியீடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# தற்கொலை செய்வதில் ஆண்களே சாதனை

(கொழும்பு)

பல்வேறு காரணங்களால் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம். திகதி வரையான கா்லப்பகுதியில் 9412 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர்களில் பெருமளவிலானோர் ஆண்கள் என் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இரத்தினபுரி மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களிலிருந்தே பெருமளவான தற்கொலைச் சம்பவம் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுமார் 40 முதல் 55 வயதுக்கு உட்பட்டோரே அதிகளவில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டில் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட 41 சிறுவர்களும் 77 சிறுமிகளும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

குடும்பப் பிரச்சினைகள், காதல் தொடர்புகள், தொழில் சார் பிரச்சினைகள், போதைப் பொருளுக்கு அடிமையா்தல், சொத்துக்களை இழத்தல், மன நோய்க் காரணங்கள், தம்மை மிகவும் அண்மித்த உறவுகளின் உயிரிழப்பால் ஏற்படும் விரக்தி போன்ற காரணங்களால் இந்த தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அனைத்துவித பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. நபரொருவர் தற்கொலை செய்து கொண்டால் அவரது உயிர் போவது மாத்திரமல்ல, அந்தத் தற்கொலையால் உயிரோடு இருப்போரும் முழு சமூகமும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

ஒருவர் தற்கொலை செய்து கொள்வதற்கு தூண்டப்படுவோர் இலங்கை குற்றவியல் சட்டத்தின் 299 ஆவது பிரிவின் தண்டனைக்குரியவராகிறார். அவ்வாறு ஒருவரை தற்கொலைக்குத் தூண்டுபவருக்கு மரண தண்டனையும் வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

# உருக்குலைந்த சடலங்கள் மாந்தையில் கண்டுபிடிப்பு

மன்னார் மாவட்டத்தின், மாந்தை மேற்கு பகுதியில் உருக்குலைந்த இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

நேற்று முன்தினம் மாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சேத்துக்குளம் பகுதியில் இருந்தே மேற்படி சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலும்புக்கூடுகளாகக் கண்டெடுக்கப்பட்டிருக்கும் சடலங்கள் இரண்டும் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளினுடைய சடலங்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஏனெனில், குறித்த சடலங்கள் இரண்டும் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்ததாகவும், அவற்றின் அருகில் விடுதலைப் புலிகளின் இராணுவ சீருடைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இடத்திற்கு விஜயம் செய்த மன்னார் நீதவான் அ.யூட்சன், சடலங்களைப் பார்வையிட்டு விசாரணைகளை நடாத்தியிருக்கின்றார். இதேவேளை, பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரையில் மன்னார் மாவட்டத்தின் முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் நேரடிகட்டுப்பாட்டின்கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண் மீது கத்திக்குத்து பிரதேச சபை உறுப்பினர் கைது

அரநாயக்க பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பெணணொருவரை கூரான ஆயுதத்தால் குத்திக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாகவே இந்த பிரதேசசபைப் உறுப்பினர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 12 ஆம் திகதி அரநாயக்க பெத்தகம பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபரான பிரதேச சபை உறுப்பினர் மாவனெல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வடக்கில் செயற்திட்டம்

(கொழும்பு)

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவியை வழங்கவுள்ளது.

அம்பாறை, வவுனியா, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை கருத்திற்கொண்டு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி வில்லி வன்டென்பேக் தெரிவித்துள்ளார்.

தமது நிதியுதவிகள் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மூலம் பகிரப்பட்டு, பணித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் காரணமாக குறித்த பிரதேசங்களின் அபிவிருத்தி பாரியளவில் பின்னிலைக்கு உட்பட்டுள்ளதாக வன்டென்பேக் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தவறான சர்வதேச அபிப்பிராயம் தவிடுபொடி வடக்கு விஜயம் நம்பிக்கை தந்தது

## கலாநிதி வில்லியம் எவ்.ஷிஜா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தபின்னர், இலங்கை தொடர்பான தனது எதிர்மறையான அபிப்பிராயத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வில்லியம் எவ். ஷிஜா கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாததைப் போன்று, சர்வதேச ஊடகங்கள் தவறான அபிப்பிராயத்தை சித்தரித்ததாக தான்ஸானியாவைச் சேர்ந்த கலாநிதி ஷிஜா டெய்லிமிரருக்கு தெரிவித்தார். அழிவின் வடுக்களை இப்போதும் காணமுடிந்த போதிலும், மக்களின் பொருளாதாரத்தில் பெருமளவான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்கும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களை சந்திப்பதற்கும் அரசாங்கத்தின் அனுசரணையில் வடபகுதிக்கு விஜயம் செய்த பல்வேறு நாடுகளின் நாடாளுமன்ற பிரநிநிதிகளைக் கொண்ட 50 இற்கும் மேற்பட்ட தூதுக்குழுவொன்றில் கலாநிதி ஷிஜாவும் பங்குபற்றினார்.

சில வருடங்களுக்கு முன்னர் மாவட்டத்தின் அனைத்து மக்களும் இடம்பெயர்ந்ததாகவும் தற்போது அவர்களில் பெரும்பாலானோர் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி படைப்பிரிவு தளபதி எமக்கு விளக்கினார் என கலாநிதி ஷிஜா கூறினார்.


எதுவுமே நடைபெறவில்லை என்ற எதிர்மறையான சித்தரிப்பை சர்வதேச ஊடகங்கள் வழங்கியுள்ளன. ஆனால் பெருமளவிலான வேலைகள் செய்யப்பட் டுள்ளன என அவர் கூறினார்.

நல்லிணக்கம் தொடர்பில் இந்த அனுபவத்தை அங்கத்துவ நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கம் தயாராகவுள்ளது என அவர் தெரிவித்தார்.

தான்ஸானி யாவை சேர்ந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஹமட் ரஷிட் மொஹமட் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அர சாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றார்.

பிரிட்டனைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹூ பெய்லி கருத்துத் தெரிவிக்கையில், உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் அரசாங்கம் அதிகளவில் முதலீடு செய்துள்ளமை பாராட்டத்தக்கது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை அது உயர்த்தும் எனக் கூறினார்.

# என்னுடைய மகன் அதிகாரியை அடிக்கவேயில்லை



(கொழும்பு)


இராணுவ அதிகாரி எவரையும் தனது மகனான மாலக்க சில்வா தாக்கவில்லை என அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

எனது மகன் ஒருபோதும் இராணுவ அதிகாரியை தாக்கவில்லை. அவர் ஒரு நபரைத் தாக்கியிருக்கலாம். ஆனால் நிச்சயமாக இராணுவ அதிகாரியைத் தாக்கவில்லை எனக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் அவர் கூறினார்.

சிறுபராயத்தில் ஏனையோருடன் நீங்கள் சண்டை பிடித்திருப்பீர்கள், இளம் பருவத்தில் நீங்கள் சண்டையிட்டிருப்பீர்கள். எனது வயதில்கூட நீங்கள் யாருடனும் சண்டையிட்டிருப்பீர்கள். இதை நிறுத்த முடியாது. ஏனெனில் நாம் மனிதர்கள். இது எனது மக்னுக்கும் பொருந்தும் என அவர் கூறினார்.

தனது மகன் ஏதேனும் செய்திருந்தால் பொலிஸார் முறையான நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் அவர் கூறினார்.

# முச்சக்கர வண்டிச் சாரதிகள் சீருடை அணியுமாறு பணிப்புரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து மீற்றர் கருவியை இணைப்பதுடன், ஓட்டுனர்கள் சீருடைகள் அணிய வேண்டுமென்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார்.


யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்றைய தினம் மாவட்ட முச்சக்கர வண்டிச் சங்க உறுப்பினர்கள், ஓட்டுனர்கள் வருகை தந்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் சேவையில் ஈடுபடும் வகையில் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் சங்கங்கள் இடங்களைத் தெரிவு செய்யும் போது ஏனைய வாகனங்களினதும், மக்களினதும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையிலும், மக்கள் பார்வைக்கு இலகுவானதாகவும் அமையப்பெறவேண்டும்.

அத்துடன் அந்தந்த கிளை மற்றும் மாவட்டச் சங்கங்களில் சகல முச்சக்கரவண்டிகளினதும் அவற்றின் உரிமையாளர்களினதும், ஓட்டுனர்களினதும் விபரங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும், அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து சகல முச்சக்கர வண்டி ஓட்டுனர்களும் சீருடை அணிய வேண்டுமென்றும், மீற்றர் திட்டம் நடைமுறைக்கு வருமென்றும் சுட்டிக்காட்டியதுடன், அமைச்சர் இச்சட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஒவ்வொருவரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்.

இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) யாழ்.பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி சமன்சிகேரா, மாவட்ட தொழில் உதவி ஆணையாளர் திருமதி நீலரோகினி ஆகியோர் உடனிருந்தனர்.

## கோவிந்த மலையைக் கையில் கொண்டு...



### "பொன்னயம் பதியில் வரதராஜப் பெருமாளாகவும் துன்னையம் பகுதியில் வல்லிபுர ஆழ்வாராகவும்"

ஆலய உற்சவங்கள் புரட்டாதி பௌர்ணமியில் சமுத்திர தீர்த்தத்தை மையமாக வைத்தே எடுக்கப்படுவது வழக்கம் அதற்கும் ஒரு கதை உண்டு. லவல்லி என்ற பெண் குழந்தைப் பேறு இன்றித் தவிர்த்தாள் அவள் ஒரு கிருஸ்ண பக்தை, அப்பக்தைக்கு அருள் புரிய எண்ணிய மாயவன் புரட்டாதி பௌர்ணமி தினத்தன்று சமுத்திரத்தில் நீருழவர் வலையில் மச்சமாகத் தோன்றினார். பின்னர் லவல்லியின் மடியில் ஒரிரு நிமிடம் குழந்தையாய்த் தோன்றி பின் சக்கரமாய் மாறினார். அச்சக்கரமே கற்கோவளம் மக்களால் பல்லக்கில் கொண்டுவரப்பட்டு வல்லிபுரத்திலே வல்லிபுர ஆழ்வாராக வீற்றிருக்கிறார். ஆகவேதான் சமுத்திர தீர்த்தத்தை வைத்து கொடியேற்றம் நிச்சயிக்கப்படுகிறது.

வல்லிபுர மாயவனுடைய ஆலயத்திற்கு மேற்காக குருக்கட்டு விநாயகர் ஆலயம் உண்டு. இவ்வாலயத்தின் தீர்த்தக் கேணி பல நோய்களுக்கு மருந்தாகும். எனவே பக்தர்கள் அங்கு நீராடுவார்கள். வல்லிபுர மாயவனுடைய கொடியேற்றத்திற்கு முன்னர் இங்கு கொடியேற்றம் இடம்பெறும்.

இக்கொடியேற்றத்திற்கு வல்லிபுர மாயவனை அங்கு கொண்டு செல்வார்கள். மருமகனின் கொடியேற்றத்திற்கு மாமனிடம் ஆசீர்வாதம் பெறுவது போல இது அமையும். இது அன்று தொட்டு இன்று வரை நடைபெறுகின்ற ஒரு சடங்காகும்.

(தொடரும்)

திரு.ச.யாதவானந்தன்
(ஆசிரியர்)

## துணை நில் கண்ணா...

கொஞ்சி வரும் கடல் அருகே - வல்லிபுரம்
கோயில் கொண்டு அமர்ந்த மாயக்கண்ணா!
தஞ்சமென வருமடியார் - குறைகளை
தயங்காது தீர்த்திடுமந்த மாயவனே!

பொலிகண்டியூர் கே.கே.விசிந்தன்

## விவசாயக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் கால போக விதைப்பு ஆரம்பமாகவிருப்பதால் 19 கமக்கார அமைப்புப்பிரிவுகளிலும் கால போக விவசாயக்கூட்டம் நடாத்தப்பட்டு வருகிறது.

பூநகரி கமநல சேவை அலுவல்ர் ந.சுந்தரமூர்த்தியினால் நடாத்தப்படும் இக்கூட்டத்தில் பசளை விநியோகம், கால்நடை கட்டுப்பாடு, நெல் விதைப்பு ஆரம்பிக்கும் திகதி என்பன பற்றி விளக்கங்கள் வழங்கப்பட்டு வடுகிறது. (112)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடுப்பகுதியில் சைக்கிள் களவுடன் சம்பந்தப்பட்ட இளைஞர் ஒருவரை யாழ்.பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

இவர் யாழ்.பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்படுவதாக மேலும் தெரியவருகிறது. விசாரணையைத் தொடர்ந்து இவர் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிகிறது. (பா,இ)

## வெள்ள வாய்க்கால் பார்வையிடல்



மணிக்கூட்டுக் கோபுர வீதியிலுள்ள வெள்ளவாய்க்கால் வடிகாலின் துப்புரவு தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்.மாநகர சுகாதாரக்குழுத் தல்லவர் விஜயகாந் அப்பகுதியை நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அதேநேரம் அவ்வாய்க்கால் அருகே அமையவுள்ள நிறுவன உத்தியோகத்தர்களுடன் நேரடியாக கலந்துரையாடி உடனடியாக அப்பகுதியில் உள்ள குப்பைகளை அகற்ற பணிப்புரை விடுத்தார்.

கடந்த 10 ஆம் திகதி மணிக்கூட்டுக்கோபுர வீதியில் உள்ள வெள்ள வாய்க்கால் துப்புரவு தொடர்பாக நடைபெற்ற யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர், பசார் வலய பிரதம சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

## முரசின் இன்றைய பலன்

(16.09.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 31 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரம் பின்னிரவு 3.26 வரை. திதி அமாவாசை முற்பகல் 8.35 வரை பின் பிரதமை இராகுகாலம் 4.33 - 6.03 வரை. சுபநேரம் 9.03 - 10.33 வரை. எமகண்டம் 12.03 - 1.33 வரை. குளிகன் காலம் 3.03 - 4.33 வரை. ஐந்தாம் ஆவணி ஞாயிறு.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நிம்மதி பிறக்கும். கருணை உண்டாகும். பிறருக்கு உதவிபுரிவீர்கள். தொழில் வளர்ச்சி. கௌரவம். பணவரவு குதூகலம். நண்பர்களுடன் சுற்றுலா. |
| ரிஷபம் | எதிர்ப்பு வரும். பேச்சைக் குறையுங்கள். தொழிலில் இருப்பதை பாதுகாப்பது நல்லது. பணவரவில் தாமதம். தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். |
| மிதுனம் | செயல்களில் நேர்த்தி. சமயோசிதம் அனுகூலம். தாராள பணவரவு. நண்பர்க்கு உதவுவீர்கள். பூர்விக சொத்தால் வருமானம். குடும்பத்தில் சுபநிகழ்வு. |
| கடகம் | குடும்ப எண்ணத்திற்கு மாறு வேண்டாம். காரிய நிறைவேற்றம் தாமதம். வரவை விட செலவு அதிகரிக்கும். போட்டி பந்தயங்கள் வேண்டாம். பயணத்தில் கவனம். |
| சிம்மம் | புதிய மாற்றம். வசீகரப் பேச்சினால் அன்பைப்பெறுவீர்கள். தொழிலுக்கு உதவி கிடைக்கும். வரவு திருப்தி. வெளியூரிலிருந்து நல்ல செய்தி. வீடு மகிழும். |
| கன்னி | மற்றவர்க்கு நல்வழி காட்டுவீர்கள். சமூகப் பொறுப்புணர்வு. தொழிலில் ஊக்கம். உபரி பணவருமானம். குடும்பத்தில் மகிழ்ச்சி. ஆரோக்கியம் சீராகும். |
| துலாம் | எதிர்ப்பு விலகும். உதவி கிடைக்கும். தொழில் அபிவிருத்தியாகும். பணவரவில் திருப்தி. தேடிய பொருள் கை வந்து சேரும். உறவினர்கள் சீராட்டு. |
| விருச்சிகம் | உணர்ச்சி வசப்பட நேரும். கடந்த கால அசைபோடுகை. தொழில் சிறந்து நம்பிக்கை வளரும். உபரி வருமானம். அரசு வகை உதவி. தெய்வ பலம். |
| தனுசு | சோர்வு. மனம் விரும்பாதவற்றில் ஒதுங்குதல் நல்லது. குறை கேட்கும் சூழ்நிலை வந்து விலகும். பணச்செலவு. வாகன அவதானம். குடும்ப உறுதுணை. |
| மகரம் | நிதானம் நன்மை தரும். பெருமை சேரும். வேலையில் கூடுதல் ஈடுபாடு. வியாபாரம் சராசரி. பணவரவுக்கு காத்திருப்பு நிலை. வாக்குவாதம் தவிர்க்கவும். |
| கும்பம் | உறவினர் பாசம். புதிய பொருள் வாங்குவீர்கள். திட்டம் ஒன்று நிறைவேறும். தொழில் மந்த கதி. வரவுக்கு மீறிய செலவு. மருத்துவ சிகிச்சை. |
| மீனம் | அவசரகதிக்கு மாறுவீர்கள். போட்டி இருக்கும். சச்சரவுகள் தவிருங்கள். பணவரவுக்கு கூடுதல் முயற்சி. உறவினர் மனக்கிலேசம். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். |

# தேசிய மட்ட கால்பந்து போராடித் தோற்றது வடமாகாணம்

(களுத்துறை)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்கள் கால்பந்துப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்துடன் வடமாகாண அணிகள் வெளியேறியுள்ளன.

மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்கள் கால்பந்தாட்டப் போட்டி நேற்றைய தினம் களுத்துறை நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாணம் சார்பாக மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணியும், வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியும் பங்குபற்றின.

மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி முதல் போட்டியில் மட்டக்களப்பு அம்பலாந்துறை மகாவித்தியாலய அணியை எதிர்க்கொண்டது. இதில் முற்பாதி ஆட்டத்தில் 7ஆவது நிமிடத்தில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய வீராங்கனை டியூரி சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைபபடுத்தினார். முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, 1-0 என்ற கோல் கணக்கில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி முன்னிலை பெற்றது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் வீறுகொண்டெழுந்து தமது ஆட்டத்தை வெளிப்படுத்திய மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி 3ஆவது நிமிடத்தில் அனட்டாவும், 7ஆவது நிமிடத்தில் டியூரியும், 10ஆவது நிமிடத்தில் ரோஸ் மேரியும், 12ஆவது நிமிடத்தில் அனட்டாவும் கோல் மழை பொழிந்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். இறுதியில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து கொழும்பு சேனாநாயக்க கல்லூரி அணியுடன், மாதல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி மோதியது. இரு அணிகளும் பலம் பெருந்திய அணிகள் என்பதால் மிகுந்த் பரபரப்பு மிக்கதாக இப்போட்டி அமைந்தது. முற்பாதி ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் கொழும்பு சேனாநாயக்க கல் லூரி அணியால் சிறப்பானதொரு கோல் போட்டது. தொடர்ந்து இரு அணிகளுமே கோல் போடும் முயற்சியை மேற்கொண்டபோதும் அது பலனளிக்கவில்லை. இறுதியில் மாதகல் சென். ஜோசப் ம.வி. அணி 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது தொடர்ந்து வெளியேறியது.

இதேவேளை, வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலய அணிக்கும், அம்பங்கொட பழுத்துகமா மகாவித்தியாலய அணிக்குமிடையில் நடைபெறவிருந்த ஆட்டத்திற்கு பளுத்துகமாக அணி சமூகம் தராமையால் கனகராயன்குளம் ம.வி. அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இரண்டாவது சுற்றில் ஊவா மாகாண சென். மேரிஸ் பெண்கள் கல் லூரி அணியை கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி எதிர்கொண்டது. இதில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் போடும் முயற்சியை மேற்கொண்டபோதும் அது கைகூடவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது ஆட்ட முறையில் பல யுக்திகளை மேற்கொண்டு ஆடினர். ஆட்டம் நிறைவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கும் நிலையில் சென். மேரிஸ் பெண்கள் கல்லூரி வீராங்கனையால் சிறப்பாக அடிக்கப்பட்ட பந்தை கனகராயன்குளம் மகாவித்தியாலய கோல் கீப்பரின் கைகளைப் பறித்துக் கொண்டு அது கோலானது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி வெளியேறிய்து. (12)

## டேரில் டப்பி ஓய்வு



(வெலிங்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேரில் டப்பி, தனது 12 ஆண்டு கால சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார். சமீபத்தில் ஏற்பட்ட சில காயங்களால் இந்த முடிவை எடுத்ததாக அவர் விளக்கம் அளித்தார். 34 வயதான டப்பி கடைசியாக 2010ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் விளையாடி இருந்தார்.

டப்பி, இதுவரை 26 டெஸ்டில் விளையாடி 77 விக்கெட்டுகளும், 94 ஒரு நாள் போட்டியில் ஆடி 110 விக்கெட்டுகளும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



முன்னாள் குத்துச்சண்டை சம்பியன் முகமது அலி (70), அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் நேற்று முன்தினம் நடந்த வண்ணமயமான விழாவில் லிபர்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். பொக்சிங்கில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு, அவர் மேற்கொண்ட மனிதநேய நற்பணிகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

# தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டி 2,3ஆம் இடங்கள் பிடித்தது வடமாகாணம்

(கண்டி)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் யாழ். மாவட்டம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பிடித்துக்கொண்டது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டி கண்டியில் நேற்று நடைபெற்றது.

இதில் இரண்டாமிடத்தை ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

தேசிய மட்டப் போட்டியில் இரண்டாம், மூன்றாமிடத்தைப் பெற்று யாழ். மாவட்டத்திற்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்த மேற்படி இரு கல் லூரி அணி வீரர்களுக்கும் விளையாட்டு ஆர்வலர்கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## வடமாகாண விளையாட்டு ஆரம்பம்



(கிளிநொச்சி)

2012 ஆம் ஆண்டு வடமாகாண விளையாட்டுப்போட்டி நேற்றைய தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது வட மாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களின் தடகள வீர வீராங்கனைகள் இப் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்

நேற்றைய முதல்நாள் நிகழ்வுக்கு பாரம்பரிய சிறுகைத்தொழில்கள் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிர-தம விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண பிரதம செயலாளர் விஜலட்சுமி ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன் மற்றும் பிரதேச செயலாளர்கள் மாகாண உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)

## பயிற்சி ஆட்டத்தில் இலங்கை வென்ற இந்தியா

இலங்கை அணிக்கெதிரான ருவெண்ரி-20 உலகக்கிண்ண பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய இந்திய அணி

20 ஓவர் முடிவில் 5 விக்கெடடுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரேஹகித் சர்மா 37, அணீத்தலைவர் டோனி 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 19.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 120 ஓட்டங்கள் மட்டுமே தோல்வியடைந்தது. இதில் குமாரா சங்கக்காரா 32, மத்யூஸ் 16, திரிமண்னே 24, மென்டிஸ் 26ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இர்பான். பதான் 5, பாலாஜி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## பீற்றர்சன் இன்றி சாதிப்போம்

(கொழும்பு

சாதிக்கக்கூடிய ஆற்றல்மிகு வீரர்கள் அணியில் இருப்பதால் பீற்றர்சன் இன்றி எம்மால் சிறப்பாக விளையாடமுடியும் என இங்கிலாந்து அணி ருவெண்ரி - 20 கப்டன் புரொட் தெரிவித்தார்.

கடந்த யூன் மாதம் 2ஆவது வாரத்தில் பீற்றர்சன் ருவெண்ரி-20 போட்டி மற்றும் ஒருநாள் போட்டியில் ஓய்வு பெற்றதாக நினைக்கிறேன். இதனால் அவர் இல்லாமல் எப்படி விளையாடுவது என்று ஏற்கனவே நாம் திட்டமிட்டுவிட்டோம். இதனால் பீற்றர்சன் இல்லாமல் எங்களால் சிறப்பாக ஆட முடியும்.

எமது அணியில் ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியதிறமை வாய்ந்த பலர் உள்ளனர். இதேபோல பல சிறந்த வீரர்கள் அணியில் உள்ளனர். எனவே, கிண்ணம் வெல்லக் கூடிய தகுதி எங்கள் அணிக்கும் இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.சி.சி. கனவு அணியில் சங்கக்கார, லசித் மலிங்க




(கொழும்பு)

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இவ்வாண்டுக்கான ஒருநாள் போட்டிக்கான கனவு அணியில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார, வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.


இதேவேளை, இந்தியாவின் டோனி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக இந்தியாவின் கௌதம் கம்பீர், இங்கிலாந்தின் அலஸ்ரெயர் குக் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். குமார் சங்கக்கார தனது வழமையான மூன்றாம் நிலையில் துடுப்பெடுத்தாடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்வணியில் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களில் குமார் சங்கக்கார, அலஸ்ரெயர் குக், மைக்கல் கிளார்க், சயீட் அஜ்மல் ஆகியோர் இவ்வாண்டுக்கான டெஸ்ட் அணியிலும் இடம்பெற்றிருந்தனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

கம்பீர், அலஸ்ரெயர் குக், குமார் சங்கக்கார, விராத் ஹோலி, டோனி, மைக்கல் கிளார்க், ஷகிட் அப்ரிடி, மோர்க்கல், ஸ்டீவன் பின், லசித் மலிங்க, சயீட் அஜ்மல், ஷேன் வட்சன் (12ஆவது வீரர்).

கனவு அணியில் இடம் பிடித்ததை இட்டு பெருமை கொள்வதாகவும், இது தனது உழைப்புக் கிடைத்த சிறந்த பரிசு எனவும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்தார்.



உலகக் கிண்ண ருவெண்ரி -20 கிரிக்கெட் தொடரின் கிண்ண அறிமுக நிகழ்வில் தொடர் பங்குபற்றும் அணித்தலைவர்கள் நிற்பதைக் காணலாம்.



குருநாகல்-பொத்துபோலா மகாவித்தியாலய சிங்கள மாணவர்களுக்கும், மல்லாவி மத்திய கல்லூரி மற்றும் யோகபுரம் மகாவித்தியாலய மாணவர்களுக்குமிடையிலான கயிறுழுத்தல் போட்டி அண்மையில் குருநாகல் பொத்துபோலா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது இரு பாடசாலை வீரர்களும் கயிறுழுத்தில் ஈடுபடுவதைக் காணலாம். (148)

# அமரர் அனோஜன் கிண்ணத்தை கைப்பற்றியது சாவா-ரவுண் அணி

(மட்டுவில்)

அமரர் அனோஜன் நிறைவுக் கால் பந்து வெற்றிக் கிண்ணத்தை சாவகச் சேரி சாவா-ரவுண் அணி கைப்பற்றிக் கொண்டது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தினால் அமரர் அனோஜன் நினைவாக தென்மராட்சிப் பிரதேசத்திற் குட்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடை யில் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 11ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மட்டுவில் வளர்மதி அணியை எதிர்த்து சாவகச்சேரி சாவா-ரவுண் அணி மோதியது. ஆரம்பம் முதலே இரு அணி களும் கோல் போடும் சந்தர்ப்பம் பல முறை கிடைக்கப்பெற்றபோதும் அதனை இரு அணிகளுமே பயன்படுத்தத் தவறிவிட்டன. இருப்பினும் முற்பாதி ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் சாவா-ரவுண் அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலை வகித்தது. தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் இரு அணி களும் மூர்க்கமான முறையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தன. பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி விறு விறுப்பாக நடைபெற்றபோதும் கோல் எதையும் போட முடியாமல் போனது.

ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள்இருக்கும் நிலையில் சாவகச் சேரி சாரா - ரவுண் வீரர் மிகச் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியின் வெற்றிக்கு மேலும் பலம் சேர்ந்தார். இறுதியில் சாவகச்சேரி சாரா- ரவுண் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியில் ஏராளமான கால்பந் தாட்ட இரசிகர்கள் பார்வையிட்டதுடன் போட்டியை மிகுந்த ஆர்வத்துடன் இரசித்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. (118)

# கால்பந்து குறித்த கலந்துரையாடல்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற் குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங் களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது. 21 வயதிற் குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியை நடாத்துவது தொடர்பாக நடைபெறும் இக்கலந்துரையாடலில் போட்டிக்கான அட்டவணை தயாரிப்பும் இடம்பெறும் என்பதனையும் தெல்லிப் பளை பிரதேச செயலக உத்தியோகத்தர் வல்லவக்குமரன் தெரிவித்துள்ளார்.

இதில், பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து அணிகளையும் கலந்துகொள் ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (93)

# டில்லி அணிக்கு மஹேல தலைவர்

இவ்வாண்டு இடம்பெறவுள்ள சம்பி யன்ஸ் லீக் ருவென்ரி - 20 தொடரில் டில்லி டெயாடெவில்ஸ் அணியின்தலை வராக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன செயற்படவுள்ளார் என டில்லி டெயாடெவில்ஸ் அணி யின் நிர்வாகம் அறிவித்துள்ளது. அவ்வணி யின் வழமையான அணித்தலைவர் விரேந்தர் செவாக் இற்குப் பதிலாகவே மஹேல ஜெயவர்தன் அணித்தலை வராகச் செயற்படவுள்ளார்.

வழமையான அணித்தலைவரான விரேந்தர் செவாக் அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்கு மாறு கோரிக்கை விடுத்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தான் அழுத்தங்களின்றித் துடுப்பெடுத் தாடுவதற்காகத் தன்னை அணித் தலை மைப் பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு விரேந்தர் செவாக் கோரிக்கை விடுத் திருந்தார்.

இவ்வாண்டு இடம்பெற்ற இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் அணித்தலைவ ராகச் செயற்பட்ட விரேந்தர் செவாக், தனது முழுமையான திறனை வெளிப் படுத்தியிருக்கவில்லை. அவ்வப்போது பிரகாசித்திருந்தாலும், அவரால்தொடர்ச் சியாகப் பிரகாசிக்க முடியவில்லை.

இந்நிலையிலேயே விரேந்தர் செவாக் கின் கோரிக்கை ஏற்கப்பட்டு இலங்கை அணியின் தலைவர் மஹேலஜெயவர்த் தன சம்பியன்ஸ் லீக் தொடருக்கான டில்லி டெயாடெவில்ஸின் அணித் தலை வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்பியன்ஸ் லீக் தொடர் அடுத்த மாதம் 9ஆம் திகதி முதல் இடம்பெற வுள்ளதோடு, டில்லி டெயாடெவில்ஸ் அணிக் குழு ஏ இல் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பேர்த் ஸ்கோச்சர்ஸ், ரைற் றன்ஸ் ஆகிய அணிகளோடு தகுதிச்சுற் றின் மூலம் தெரிவாகும் இன்னுமொரு அணியுடனும் குழுநிலைப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

# கொக்குவில் அரசடி மென்பந்து கிரிக்கெட் முதல் சுற்றில் ஒன்பது அணிகள் வெற்றி

(கொக்குவில்)

கொக்குவில் அரசடி விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் ஒன்பது அணிகள் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளன. கொக்குவில் அரசடி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 36 அணிகள் பங்குபற்றி வருகின்றன. இவ் அணிகளுக்கான முதல் சுற்று ஒன்பது ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசடி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் வள்ளுவர் அணி யும், வேல்முருகன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வேல்முருகன் அணி களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய வள்ளுவர் அணி 5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விருத்திரன் நான்கு சிக்ஸர் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிரிதாஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய வேல்முருகன் அணி 3.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரமணா ஐந்து சிக்ஸர்கள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பத்திரகாளி அணி யும், பயர்வேட்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பத்திரகாளி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விஜிதரன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிளக்கூஷ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 47 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய பயர்வேட்ஸ் அணி 3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆசிதன், மயூரன் தலா 22 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற முன்றாவது போட்டியில் பிடாரி அம்மன் அணி யும், பாரதி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பிடாரி அம்மன் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் ஆறு சிக்ஸர்கள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வினோஜன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையீல் களமிறங்கிய பாரதி அணி 4.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுதாகரன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அரவிந்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மற்றுமொரு போட்டியில் முழுமதி அணியும், அன்புநிலா அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய முழுமதி அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கனிந்தன் 40, நிக்ஷான் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அன்புநிலா அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் இந்துசன் 28, ராகுல் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரதீஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பிரம்படி அணிக்கும் ஈசன் கிங்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்ற. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பிரம்படி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜன் ஆட்டமிழக்காது 33, அனுசன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அரவிந் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஈசன் கிங்ஸ் அணி 4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சங்கீதன் ஏழு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சானுஜன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

அரியாலை காந்தி அணிக்கும் இந்திரா அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய அரியாலை காந்தி அணி 3.4 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லோகாந் 8 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரதீசன், தீபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 14 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திரா அணி ஒரு ஓவர் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிரதீசன் 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிமல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

அரசடி அணிக்கும் கேசாவில் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய அரசடி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்சன் 30, விதுசன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சமுகன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


பதிலுக்கு ஆடிய கேசாவில் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஹரி 25 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ். சென்றல் அணிக்கும் முருகமூர்த்தி அணிக்குமிடையில் எட்டாவது போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீர்த்திகன் 30, டிலக்சன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாந்தன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய முருகமூர்த்தி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் திலீபன் 30, குட்டி 20 ஓட்டங்களைப் பெற்றனர். டிலக்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஒன்பதாவது போட்டியில் அன்பு நிலா சி அணிக்கும் வெற்றிமாதா அணிக்குமிடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வெற்றிமாதா அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக் கெட்டை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லதீப் ஆறு சிக்ஸ ர் கள் அடங்கலாக 47, சுரேஷ் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திசங்கன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய அன்புநிலா சி அணி 4.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் பிரியதர்சன் நான்கு சிக்ஸர்கள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுரேஷ், லதீப் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (53)

# கிழக்கில் கட்சி தாவும் த.தே.கூ. உறுப்பினர்கள்



**கி**ழக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிவடைந்து ஆட்சி அமைப்பதற்கான போட்டியில் வெற்றி பெற்ற வேட்பாளர்களை இப்போது தம்பக்கம் இழுப்பதற்கும் அவ்வாறே வெளியேறிச் செல்வதை தடுப்பதற்கான முயற்சியிலும் கட்சிகள் மிகத் தீவிரமாக இறங்கியிருக்கின்றன.

இம்மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரத்தின் போது அனைத்துக் கட்சிகளும் தத்தமது இனம் சார்ந்து தமது வெற்றிக்கான பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன. இப்போது மூவின கட்சிகளுக்கும் பரவலாக ஆசனங்கள் கிடைத்திருக்கும் நிலையில், ஆட்சி அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மையை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் அக் கட்சிகளுக்கு சவாலான விடயமாக மாறியிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுள்ள 7 ஆசனங்கள் தமக்கான சலுகைகள், வசதிகளை அரசிடம் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை இந்த கிழக்கு மாகாண சபை தேர்தல் வழங்கியிருகிறது என்றால் அது மிகையாகாது.

- சாலையூரான் -

இப்போது தேர்தல் முடிவுகளின் அறிவிப்புக்குப் பிறகு வெற்றி பெற்ற தமது கட்சி வேட்பாளர்களை அரசு தம்பக்கம் இழுக்க முயற்சிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆத்திரத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

பரந்தளவிலான வாக்கு வேட்டைக்கு வசதியாக தத்தமது இனம்சார்ந்து பிரசாரங்களை மேற்கொண்டு தேர்தலில் வெற்றிபெற்ற பின்பு இனத்துவ நிலைப்பட்ட தம் கட்சியின் கோட்பாட்டுகளுக்கு மாறாக வெற்றி பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களை தம் பக்கத்துக்கு சேர்த்து ஆட்சி அமைப்பதை ஏற்றுக்கொள்ளும் அரசியல் சூழலொன்றுக்குள் நாம் எல்லோருமே இப்போது வந்து விட்டோம்.

அனைத்து இன மக்களும் சுபீட்சமாக வாழ்வதற்கு எத்தகைய திட்டத்தை முன்னெடுக்கலாம் என்பதை பிரசாரம் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பதிலாக, தாமும் தமது அணியும் வெல்வதற்கு தமது இனம் சார்ந்து எதனை மக்களிடம் கூறினால் தேர்தலில் வெற்றி பெறலாம் என கட்சித் தலைவர்கள் சிந்திக்கப் புறப்பட்டதன் விளைவுதான் இனத்துவ நிலைப்பட்ட விரோத உணர்வுகள் மக்கள் மத்தியில் உருவாவதற்கு அடிப்படையான காரணமாக இருந்திருக்கிறது.

இப்போது புதிய சோதனைகள் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முன்னால் வந்து நிற்கின்றன. அரசுக்கெதிராக பிரசாரம் மேற்கொண்டு வெற்றி பெற்ற அவர்களது உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைக்க உதவுவார்களாயின் தமிழ் தேசியம் தேர்தலுக்கு மட்டும் கூட்டமைப்பினரால் பயன்படுத்தப்படும் ஒரு துருப்புச் சீட்டு என்பதும் தேர்தலின் பின்னர் அது கிடப்பில் போடப்படும் ஒரு விடயம் என்ற உண்மையும் வெளியாகி விடும்.

தனது கட்சி உறுப்பினர்களின் கட்சித்தாவலை நியாயப்படுத்த ஏதாவது காரணங்களை முன்வைப்பார்களா? அன்றி கட்சி தாவியவர்களை துரோகிகளாக அறிவித்து தாம் தப்பித்துக் கொள்வார்களா? என்பது இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

# நாளைய காந்தி



**கா**ந்தியை மறுவாசிப்பு செய்வதென்பது இந்திய சிந்தனையாளர்களின் வாழ்வில். தவிர்க்க முடியாத ஒரு கால கட்டம் (அதாவது அவர்கள் தொடர்ந்து சிந்தித்தால்). தமிழ் சிந்தனையாளர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. மறுவாசிப்பு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. ஏதோவொரு விதத்தில் அதைத் தவிர்க்க முடியாது என்பதுதான். காந்தியை வாசிப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. சமகால வாசிப்பில் பல ஒவ்வா மைகளை நாம் சந்திக்கத்தான் வேண்டியிருக்கும். ஆனால் காந்தியின் சிந்தனைகளில் புறக்கணிக்க முடியாத சில அம்சங்கள் இருக்கின்றன.

- ராஜன்குறை கட்டுரையிலிருந்து.

காந்தி மிக முக்கியமான திருப்புமுனையை இந்திய அரசியலில் ஏற்படுத்தினார். அதுவரை வெள்ளைக்காரர்களி டம் அதிகாரப் பகர்வு, சுயாட்சி என்ற அடிப்படையில் இயங்கி வந்த அரசியல் சொல்லாடலை முற்றிலும் புதிய திசையில் திருப்பினார். வெள்ளைக்காரர் கள் இந்தியாவில் இருப்பதோ, ஆட்சி செய்வதோ பிரச்சினை யில்லை, ஆனால் அவர்கள் நாட்டின் நவீன உற்பத்தி முறை மற்றும் அரசியல் நிர்வாக அம்சங்களை இங்கே இறக்குமதி செய்யக்கூடாது என்றார். வேறு வார்த்தைகளில் சொன்னால் இந்திய மக்கள் அவர்கள் வாழ்வை மேற்குலகி லிருந்து வேறுபட்ட விதத்தில் வடிவமைத்துக்கொள்ளும் உரிமையைப் பெறுவதே சுயராஜ்யம் என்றார். எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் நடப்பது போலவே அவர் மகாத்மாவாக்கப்பட்டார், ஆனால் அவர் கருத்திற்கு நேர்மாறாக ஆட்சியதிகாரம் மட்டுமே இந்தியர்கள் கைக்கு வந்தது. இந்தியா மேற்கத்திய உற்பத்தி மற்றும் நிர்வாக வழிமுறைகளைப் பின்பற்றத் தொடங்கியது. இந்தியா வல்லரசாக மாறவேண்டும்" என்பது அனைவரும் சூல்கொள்ள வேண்டிய மனக்கிடக்கையாக மாறியது. எதற்காக இந்தியா வல்லரசாக வேண்டும் உகண்டாவோ, சிலியோ, நேபாளமோ, மாலைதீவோ உலக வல்லரசாக மாற முடியுமா? அப்படி மாறாததால் அவர்களுக்கு ஏதாவது பிரச்சினையா என்று யாரும் யோசிப்பது சாத்தியமற்றுப் போனது.

வளர்ச்சி என்பது என்ன, எதற்காக எந்த அளவு அது தேவை, மின்சாரம் என்பது இன்றியமையாததா, நம்முடைய மின்சாரப் பயன்பாடுகளில் எவையெல்லாம், எந்தக் காரணங்களால் இன்றிய மையாதவை என்பதையெல்லாம் கேட்காமல் அணு உலையை எதிர்ப்பதற்கான தத்துவ தளத்தை உருவாக்க முடியாது. இல்லை யென்றால் "சாலையில் போனால் விபத்து நடக்கலாம் என்பதற்காக சாலையில் போகாமல் இருக்க முடியுமா?" என்பது போன்ற அபத்தமான, சோப்ளாங்கி தர்க்கங்கள்கூட அணு உலை எதிர்ப்பை பரவாமல் தடுத்துவிடும். அணு உலை எவ்வளவு அபாயமானது என்பதை மட்டும் பிரசாரம் செய்வது ஒரு பக்கச் சார்பானது. அந்த ஆபத்தை எதற்காக நாம் எதிர்கொள்ளவேண்டும் என்ற கேள்வியை முன்னெடுக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன,



எதற்காக என்ற கேள்வியை கையிலெடுக்காமல் அணு உலை எதிர்ப்பிற்கான தத்துவ அடிப்படைகளை வலுப்படுத்த முடியாது. இருபத்திரண்டு வயதில் "இந்து சுயராஜ்யம்" நூலை படித்தபோது "மனிதனுக்கு கால்கள் போதுமென்றுதான் கடவுள் அவற்றைக் கொடுத்திருக்கிறார் சக்கரங்கள் தேவையென்றால் கால்களுக்குப் பதில் சக்கரங்களை வைத்திருப்பார்" என்ற காந்தியின் வரிகளைப் படித்துவிட்டு வாய்விட்டுச் சிரித்தேன். ஆனால் அந்த வரிகளில் தேவை எது, இன்றியமையாதது எது என்பதை வேறுபடுத்திப் பார்க்கச்சொல்லும் தத்துவம் ஒளிந்திருப்பது இப்போதுதான் புரிகிறது.

நம்மால் செய்வதற்குச் சாத்தியமானதையெல்லாம் நாம் செய்தாகவேண்டியது அவசியமில்லை. தலைமுடியுடன் ஆட்டுக்கல் லை இணைத்துக்கட்டி இழுக்கலாம் என்பதால் தினசரி அதை செய்யவேண்டியதில்லை. அதே போல உற்பத்தி செய்ய முடிவதை யெல்லாம் உற்பத்தி செய்தாக வேண்டும், நுகர முடிவதையெல்லாம் நுகர்ந்தாக வேண்டும் என்பது அவசியமில்லை. முதலீட்டியத்தின் பத்மாசுர வடிவம் அதைத்தான் செய்கிறது. யார் தலையில் கை வைத்தாலும் அவர்களை அழிக்கும் ஆற்றலை பெற்ற பத்மாசுரன் தன் தலையில் தானே கையை வைத்துக்கொண்டு அழிந்தான். ஆனால் முதலீட்டியம் தன் தலையில் தானே கைவைத்துக் கொள் ளும்போது அழியப்போவது அதை செயலப்படுத்தும் மானுடம்தான்.

**ஓ**டியே பழகிவிட்ட நமக்கு உடம்பில் உள்ள எலும்புகள் எதற்காக உள்ளன, அதை ஏன் பாதுகாக்க வேண்டும் என்ற காரணங்களைச் சிலர் காது கொடுத்து கேட்பதற்குக் கூட நேரம் இருக்காது. உடம்பில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. மனிதன் தன் தேவைகளுக்கு ஏற்ற வகையில் அதனை உப யோகப்படுத்திக் கொள்ளும் வகையில் அவை உள்ளன. நாம் இந்த மொத்த எலும்புகளையும் பாதுகாக்க எடுத்துக் கொள்ளும் உணவு முறைகள் மற்றும் வாழ்க்கை முறை மிக முக்கியமாகும். இந்த மொத்த எலும்புகளும் உடம்பில் உள்ள பகுதிகளுக்கு ஏற்ப தங்களை வடிவமைத்துக் கொண்டு மனிதனுக்கு உடல் கட்டமைப்பை கொடுக்கின்றன.

மற்ற உறுப்புகளை பாதுகாப்பதில் எலும்புகள் மிக முக்கிய பணியை செய்து வருகின்றன. உதாரணமாக மூளை, இருதயம், சிறுநீர கம், சுவாசப்பை போன்ற பகுதிகள் எலும்புகளின் மூலம் உருவாக்கப்பட்ட கூடுகளில் மிகப் பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றன.



# ரஜினிகாந் ஏன் அமெரிக்கா செல்கிறார்?

மூளை மண்டைக் கூட்டிற்குள்ளும், இருதயம், சுவாசப்பை ஆகியன நெஞ்சுக் கூட்டிற்குள்ளும் வைக்கப்பட்டு பாதுகாக்கப் படுகிறது. இதுபோன்ற பாதுகாப்புகளை நமக்கு அளிக்கின்ற எலும்புகள் விபத்துக்களின் போது சில நேரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டு உடைகின்றன.

இதனைப் போன்று இன்னும் பல்வேறு நோய்கள் மனித எலும்புகளை பாதிக்கின்றன. அதில் சமீப காலமாக அனைவரையும் பயமுறுத்தி வரும் பாதிப்பு எலும்பு தேய்மானம். இதைச் சரிசெய்து கொள்ளவே நடிகர் ரஜினிகாந் அடிக்கடி அமெரிக்கா செல்வதாகச் சொல்லியிருக்கிறார். இதை ஒரு நோய் என்பதை விட குறைபாடு என்பது மிகவும் பொருந்தும். அதாவது மனிதன் முதுமை அடையும் போது ஏற்படும் உடல் மாற்றங்களில் இந்த எலும்புகளும் சேதம் அடைய தொடங்கிவிடுகின்றன. இதனை நாம் நம் கண்களால் காண முடியாது. மிக மெதுவாக தேயத் தொடங்கும் எலும்புகள், பிற்காலத்தில் ஏற்படுத்தும் நோயின் தீவிரம் ஆளைக் கொடுமைப்படுத்தும் வலிமை உடையது.

முதுமையில் பொதுவாக நாற்பது வயதைத் தொடும் பொழுது மனித எலும்புகள் தனது வலுவை இழக்கத் தொடங்கிவிடுகின்றன. இதனைத் தான் மருத்துவர்கள் எலும்புத் தேய்மானம் என்று பொதுவாக விளக்கம் அளிக்கிறார்கள். இது பொதுவாக பெரும்பாலும் பெண்களை அதிகமாக அவதிக்குள்ளாக்கிவிடுகிறது. பெண்களில் 40 வயதில் முதல் இந்த நோயின் தாக்கம் ஏற்படத் தொடங்கி அவர்கள் வயது அதிகரிக்க அதிகரிக்க நோயின் தீவிரம் அதிகரித்து மிக தீவிரமான பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிறது.

எலும்புகளுக்குத் தேவையான முக்கியமான ஒன்று கல்சியம். கல்சியத்தை எலும்புகள் நாம் உண்ணும் உணவில் இருந்து எடுத்துக்கொள்ளும் தன்மை கொண்டுள்ளன. இந்தக் குணம் பொதுவாக நாம் முதுமையை நெருங்கும் பொழுது மெதுவாக மாறியும் மறைந்து போய்விடுவதால் எலும்பு தேய்மானம் வருகிறது. அதாவது முக்கியமாக பெண்களில் உதிரப்போக்கு நின்று போகும் காலகட்டங்களில் உடலில் ஏற்படும் ஹோர்மோன் மாறுபாடுகளால் எலும்புகளில் கல்சியத்தை சேகரித்து வைக்கும் பண்புகள் வலுவிழந்து இந்த குறைபாடு ஏற்படுகிறது.

இதனால் ஏற்படும் எலும்பு முறிவு, மூட்டு வலி, மூட்டு வாதம், கழுத்து எலும்பு தேய்மானம், முதுகு எலும்பு தேய்மானம், முதுகு வலி, உடல் சோர்வு, அசதி, முதுகு எலும்பு வளைந்து கூன் விழுதல், நடையில் தளர்வு இதுபோன்ற பக்க விளைவுகளால் பெண்கள் 40 வயது முதல் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எல்லா நோய்களையும் நம்மால் குணப்படுத்துவதை விட முற்கூட்டியே கவனமெடுத்தால் எளிதாக தடுக்க முடியும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

# புதுச்சட்டை



ராஜாஜியைப் பார்த்து ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார், "சென்ற ஆண்டு ஆதரித்த கட்சியை இந்த ஆண்டு அகற்ற எண்ணியது ஏன்? தங்களுக்கு ஒரு நிலையான கொள்கை இல்லையென்று ஆகிவிடாதா?"

இதற்கு ராஜாஜியின் பதில், "சென்ற ஆண்டு வரை எனக்குப் பொருத்தமாயிருந்த சட்டை, இந்த ஆண்டு சின்னதாகச் சுருங்கிவிட்டதால், நான் புதுச்சட்டை தைத்துக் கொண்டேன். இதிலென்ன தப்பு?"

# எழுவாய், பயனிலை!

பரிதிமாற் கலைஞர் ஒரு முறை இலக்கணப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது மாணவன் ஒருவன் பாடத்தைக் கவனிக்காது வெளியில் கருத்தைச் செலுத்தினான்.

அந்த மாணவனைப் பார்த்த பரிதிமாற் கலைஞர், "பாடங் கேட்கும் கருத்தில்லாத நீ இவ்விடம் விட்டு எழுவாய். நீ இங்கிருப்பது உனக்கும் பிறருக்கும் பயனில்லை. இங்கிருந்து உன்னால் செய்யப்படுபொருள் ஏதுமில்லை" என்றாராம்.

# ஆயிரத்தொரு இரவுகள்!

அரேபியன் இரவுகள், இதன் மறுபெயர் ஆயிரத்தொரு இரவுகள். இது பண்டைய நாட்டுக் கதைகளின் தொகுப்பு. அரேபிய நாட்டில் தோன்றிய கதைகளாக கருதப்படுகிறது. ஆனால், இக்கதைகள் யாவும் இந்தியாவில் இருந்து அரபு நாட்டுக்குச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

பலர் கூறிய கதைகளின் தொகுப்பாக இருப்பினும், இவை யாவும், ஒரே ஒருவரால் கூறப்பட்டது போல் எழுதப்பட்டிருக்கிறது.

ஒரு பெண்ணை மணந்தார் ஷெக்ரியார் என்ற மன்னர். அவள், மன்னனை ஏமாற்றி விட்டாள். சினமுற்ற மன்னன், பின், மணம் செய்து கொண்ட ஒவ்வொரு பெண்ணையும் அடுத்த நாள் காலையில் கொன்று விடுவது வழக்கம்.

கடைசியில் ஷெக்ரசாத் என்பவளை மணந்தார். அடுத்த நாள் காலையில் அவள் கொலை செய்யப்படுவதற்கு முன், தன் தங்கையை ஏவி விட்டுக் கடைசிக் கதை ஒன்று தங்கைக்குச் சொல்ல, ஷெக்ரசாத்திற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்கச் சொன்னாள், அரசனும் அனுமதித்தார்.


கதையை ஆரம்பித்தாள் ஷெக்ரசாத். அரசனும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தார். கொலை செய்யும் நேரம் வந்தது. கதை முடியவில்லை. கதை கேட்கும் ஆர்வத்தில் மூழ்கி இருந்த அரசன், அடுத்த நாள் காலை வரை கொலை செய்வதை தள்ளிப் போட்டான்.

கதையை ஒன்றன்பின் ஒன்றாகப் பின்னி, 1001 இரவுகள் கடத்தி விட்டாள் ராணி ஷெக்ரசாத். மன்னனும் கொலை செய்வதை ஒவ்வொரு நாளும் தள்ளிப் போட்டு வந்தான். ஷெக்ரசாத்தின் கதைகளில் மனம் லயித்த அரசன், கொலை செய்யும் கட்டளையைத் திருப்பிப் பெற்று, ஷெக்ரசாத்தை ராணியாக்கிக் கொண்டான். கதைகளுக்கு இருக்கும் சக்தியையும், அவை மனிதர்களை மாற்றிப்போடும் வல்லமையையும் இது புலப்படுத்துகிறது.

இக்கதைகள் யாவும் அரசர்களின் வீரச் செயல்களையும், அவர்களுடைய பிரபுக்கள், அடிமைகள், வியாபாரிகள், நடன மாதுகள், அபூர்வ மிருகங்கள் ஆகியவற்றைப் பற்றி கூறுபவை. அலிபாபாவும், 40 திருடர்களும் என்பது இக்கதைகளில் ஒன்று. இக்கதைகள் பல ஆசிய, ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் படுதோல்வியடைந்த தமிழரசுக்கட்சி

- அஸ்வின் மித்ரா.



நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியானது மட்டக்களப்பு மாவட்டத்தில் படுதோல்வி யடைந்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் 07 உறுப்பினர்களை களமிறக்கிய போதும் ஆக இரண்டே, இரண்டு உறுப்பினர்கள் மாத்திரமே கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவாகியுள்ளனர். ஏனைய 04 உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டு போட்டியிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட துரைரெட்ணம் (EPRLF) அமைப்பினையும், ஜனா மற்றும் பிரசன்னா இருவரும் (TELO) அமைப்பினையும், வெள்ளிமலை தமிழர் விடுதலைக் கூட்டணியினையும் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 06 பேரில் துரைராஜசிங்கம், நடராஜா ஆகிய இருவர் மாத்திரமே தமிழரசுக் கட்சியினைச் சேர்ந்தவர்களாவர்.

அதிலும் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு விருப்புவாக்கு அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இரண்டாம் நிலையில் இருக்கும் துரைராஜசிங்கம் பெற்றுக் கொண்ட 27717 விருப்புவாக்குகளும் அவருக்கு மட்டும் உரித்தானவை அல்ல.

அவர் தனியாகப் பெற்றுக் கொண்டவை 17903 விருப்பு வாக்குகள் மட்டுமேயாகும். மேலதிகமாகக் கிடைத்த வாக்குகள் அனைத்தும் துரைரெட்ணத்திற்கு வழங்கப்பட்ட வாக்குகளினூடாக இரண்டாம் பட்சமாகப் புள்ளடியிடப்பட்டு துரைராஜசிங்கத்தைச் சேர்ந்தவையாகும்.

கல்குடா தொகுதியின் தேர்தல் பெறுபேறுகளை வைத்து பார்க்கும் போது யோகேஸ்வரன் எம்.பியின் செல்வாக்கு கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது வெட்ட வெளிச்சமாகிறது. காரணம் யோகேஸ்வரன் எம்.பியால் பரிந்துரைக்கப்பட்டு தமிழரசுக் கட்சியால் களமிறக்கப்பட்ட கதிரவெளியைச் சேர்ந்த சிவநேசன் மற்றும் சந்திவெளியைச் சேர்ந்த சேயோன் ஆகிய இருவரும் தோல்வியைத் தழுவியுள்ளனர். இவர்களுடைய தோல்வி யோகேஸ்வரன் எம்.பியின் வீழ்ந்து வரும் செல்வாக்கின் எதிரொலியாகவே பார்க்கப்படுகின்றது.

அடுத்ததாகப் பார்க்கும் போது நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் பரிந்துரை செய்து கூட்டணியில் போட்டியிட்ட உறுப்பினர்களுள் நடராசா தவிர்ந்த மூன்று உறுப்பினர்கள் மிக மோசமான தோல்வியைத் தழுவியுள்ளனர். ஈச்சந்தீவு யோகானந்தராசா, களுதாவளையைச் சேர்ந்த குணம், பழுகாமம் ஏ.சு.மகேந்திரன் ஆகிய மூவருமே இவ்வாறு தோல்வியடைந்தவர்களாவர். அரியநேந்திரன் இவர்களுக்கு ஆதரவாக மேற்கொண்டு வந்த பலமான பிரசாரங்களையும் தாண்டித் தாக்கம் செலுத்தியுள்ள இந்தத் தோல்வியானது அரியநேந்திரனது செல்வாக்கினையும் அசைத்துக் காட்டியிருப்பது புலனாகின்றது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட மாற்றுக் கூட்டணி கட்சிகளினுடைய வெற்றியும், தமிழரசுக் கட்சியினரது இழப்புக்களும் ஆழமாக ஆராயப்படுமிடத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட மாற்றுக் கட்சிகள் "இளநீர் குடிக்க, தமிழரசுக் கட்சி குரும்பை சுமந்த" கதையாகி நிற்கின்றது. இதுவே யதார்த்தமுமாகும்.

# கூடங்குளம்: நடப்பது என்ன?



**தமிழ்நாடு கூடங்குளம் அணு உலையில் யுரேனியம் நிரப்புவதற்கு எதிராகக் கூடங்குளம் பகுதி மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (9.9.12) போராட்டம் நடத்தினர். அங்கு நடந்த நிகழ்வுகளாக அறியப்படுபவை :**

**1.** 9.9.12 ஞாயிற்றுக்கிழமை போராட்டக்குழுவினர் உதயகுமார், புஷ்பராயன் ஆகியோர் தலைமையில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கூடங்குளம் பகுதி மக்கள் அணிதிரண்டு கடற்கரை வழியாக அணு உலையை நோக்கி நடந்தனர்.

**2.** இது ஒரு அறவழிப்போராட்டம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் கைகளில் வெள்ளைக் கொடிகளை ஏந்தியபடி சென்றனர்.

**3.** அணு உலைக்கு 500 மீற்றர் தொலைவில் பொலிசார் தடுத்து நிறுத்தியதும் கடற்கரை மணலிலேயே அமர்ந்து தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டினர். பொலிஸாரின் தடையை மீறி அணு உலையை நோக்கிப் போக முற்படவில்லை.

**4.** கலெக்டர் செல்வராஜ், எஸ்.பி.விஜயேந்திர பிதரி இருவரும் கூறிய சமரச உடன்பாடுகளை ஏற்காத மக்கள் அன்றைய இரவு கடற்கரை மணலிலேயே தங்கினர்.

**5.** மறுநாள் (10.9.12) போராட்டத்திற்கு ஆதரவாகச் சுமார் பத்திற்கும் மேற்பட்ட படகுகளில் போராட்ட ஆதரவாளர்கள் வந்தனர். அதில் ஒரு படகு அணு உலையின் பின்பக்கம் சென்றிருக்கிறது. இதனைக் கவனித்த பொலிஸார் படகில் வந்த இருவரையும் பிடித்துவைத்துக் கொண்டனர். பதிலுக்குப் போராட்டக்காரர்களும் பொலிஸார் இருவரைப் பிடித்துவைத்துள்ளனர். பிறகு சமரசம் பேசப்பட்டு இருதரப்பினரும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**6.** கடற்கரையில் அமர்ந்து கொண்டிருந்த போராட்டக் குழுவினரிடம் தென்மண்டல ஐ.ஜி. ராஜேஷ்தாஸ் அதிகாரத்தோரணையில் பேசியிருக்கிறார். இதனால் கோபமடைந்த மக்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வாய்த்தகராறு ஏற்பட்டு சிறிய கைகலப்பு நடந்திருக்கிறது.

**7.** இதனையடுத்து ஆத்திரமுற்ற பொலிஸார் வேகமாகக் கூட்டத்திற்குள் புகுந்து தடியடி நடத்தியும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசியும் மக்களை விரட்டியடித்திருக்கிறார்கள். மக்களும் இவர்கள் மீது கற்கள், செருப்புகள், கம்பிகளை எடுத்து வீசியிருக்கிறார்கள். இந்நிலையில் போராட்டக்குழுத் தலைவர் உதயகுமார், புஷ்பரார்ஜன், ஜேசுராஜ் ஆகியோர் தயாராக நின்றிருந்த படகு ஒன்றில் ஏறி கடலுக்குள் சென்றிருக்கிறார்கள்.

**8.** இடிந்தகரைக்குள் நுழைந்த பொலிஸார் வீடுவீடாகப் புகுந்து சோதனை என்கிற பெயரில், வீட்டிற்குள் இருந்தவர்களைத் தாக்கிப் பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர். சுனாமி காலனி மக்கள் மீது கடும் தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கிறது.

**9.** பொலிஸின் தாக்குதலைக் கண்டித்து சுற்றுவட்டார மீனவ கிராமங்களும் போராட்டக்களத்தில் இறங்கின. தீ வைப்பு சம்பவங்களும் சாலை மறியல்களும் போராட்டக்காரர்களால் நடத்தப்பெற்றன. அருகிலுள்ள கிராமம் ஒன்றில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு மீனவர் அந்தோனி ஜான் பலியானார்.

**10.** வைராவிக்கிணறில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பொலிஸார் இடிந்தகரைக்குள் புகுந்து அங்கு தேவாலய மேடையில் அமர்ந்துகொண்டிருந்த பெண்களை அடித்து விரட்டியிருக்கிறார்கள். மாதாவின் சேலையை உருவி கீழேபோட்டு உடைத்திருக்கிரார்கள். தேவாலயத்திற்குள்ளேயே சிறுநீர் கழித்து ஆலயத்தின் புனிதத்தன்மையை அவமதித்திருக்கிறார்கள்.

**11.** நீண்டநேர கலவரத்திற்குப் பின்பு பொலிஸ் திருப்பி அழைக்கப்பட்டது. இடிந்தகரையில் திரண்ட மக்கள் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

**12.** மறுநாள் (11.9.12), கூடங்குளம் கிராமத்தில் நுழைந்த பொலிஸார் தெருத்தெருவாகச் சென்று கலவரத்தில் ஈடுபட்டதாகச் சொல்லி அடித்து உதைத்துப் பலரையும் கைது செய்திருக்கிறார்கள். இடிந்தகரையில் உள்ள வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு போராட்டக்காரர்கள் தீ வைத்ததாகச் சொல்லப்படுகிறது. (எனினும் போராடும் மக்கள் இதை மறுத்துள்ளனர். பொலிஸார்தான் இதைச் செய்தது என்கின்றனர்.)

**13.** மாலை 4.30 மணி அளவில் உண்ணாவிரத மேடைக்கு வந்த உதயகுமார் தான் கூடங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைய இருப்பதாகக் கூறினார். ஆனால் கூடி இருந்த இளைஞர்கள் அவரை வலுக்கட்டாயமாகத் தூக்கிப் படகில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

**14.** மறுநாள் (12.9.12), கூடங்குளம், சுனாமி காலனி, இடிந்தகரைப் பகுதிக்குள் புகுந்த பொலிஸார் முதல்நாள் கலவரத்தைத் தூண்டியதாகச் சொல்லி ஐம்பதிற்கும் மேற்பட்டவர்களை வளைத்துப் பிடித்திருக்கிறார்கள்.

**15.** கைது நடவடிக்கை, அதிரடிப்படை, விமானத்திலிருந்து கண்காணிப்பு, அருகில் உள்ள கிராம மக்களை ஒன்றிணைய முடியாதபடி தடுப்பு அரண்கள் போன்ற பொலிஸின் செயற்பாடுகளால் போராட்டத்தை நசுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**16.** (13.9.12), சுமார் ஐந்தாயிரம் மக்கள் கடலில் இறங்கும் போராட்டத்தைத் தொடக்கியிருக்கிறார்கள். போராட்டக்குழுத் தலைவர் உதயகுமாரைத் தேடப்படும் குற்றவாளியாகக் பொலிஸ் அறிவித்துள்ளது.












A.J.Nimalrajan



## முதல் ஹார்ட்டிஸ்க்

பெர்சனல் கம்ப்யூட்டர்களுக்கான முதல் ஹார்ட் டிஸ்க்கினை 1979 ஆம் ஆண்டு முதல் முதலாக ஸீகேட் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. இதன் கொள்ளளவு 5 எம்.பி.முதன் முதலில் தங்களுக்கென ஓர் இணையதளப் பெயருக்கு விண்ணப்பித்தவர்கள் டிஜிட்டல் எக்விப் மெண்ட் கார்ப்பரேஷன் ஆகும்.

உலக அளவில் டெட்ரிஸ் கேம் 4 கோடி காப்பிகள் விற்பனை செய்யப்பட்டது. 1989ல் இது தொடங்கப்பட்டது. இதன் மூலம் 80 கோடி டொலர் வருமானம கிட்டியது.கம்ப்யூட்டர் மற்றும் ரைப் ரைட்டரில் பயன் படுத்தப்படும் குவெர்ட்டி கீ போர்டு வடிவமைக்கப் பட்டு 129 ஆண்டுகள் ஆகின்றன.

## உங்கள் ஆண்டிவைரஸ் சரியாக இயங்குகிறதா என்பதை கண்டறிய

நமது கணினிகளுக்கு ஆண்டிவைரஸ் மிகவும் அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே. சிலர் விலை கொடுத்து ஆண்டிவைரஸ் வாங்கி பயன்படுத்துவார்கள். சிலர் இலவச ஆண்டிவைரஸ் பயன படுத்துவார்கள்.

எதுவாக இருந்தாலும் அது சரியாக இயங்கவில்லை எனில் பிரச்சினை தான். உங்கள் ஆண்டிவைரஸ் சரியாக இயங்குகிறதா என கண்டுபிடிக்க European Institute for Computer Antivirus Research என்ற அமைப்பு EICAR test file என்னும் ஒரு முறையை கொடுத்துள்ளது.

இதற்கு முதலில் உங்கள் கணினியில் notepad (நோட்பேட்) திறந்து கொள்ளுங்கள். பின் கீழே உள்ளவற்றை உள்ளது போல உங்கள் notepad ல் ரைப் செய்யுங்கள் அல்லது கொப்பி செய்து பேஸ்ட் செய்து கொள்ளுங்கள்.

X5O!P%@AP[4PZX54(P^)7CC)7}$EICAR-STANDARD-ANTIVIRUS-TEST-FILE!$H+H* கொப்பி செய்த பின் உங்கள் notepad ல் File -> Save AS கொடுங்கள்.

Save செய்யும் போது .com என கோப்பு முடியுமாறு save செய்து கொள்ளுங்கள். பின் அந்த கோப்பை இயக்கினாலோ அல்லது save செய்யும் போதோ உங்கள் ஆண்டிவைரஸ் இந்த கோப்பை வைரஸ் என எச்சரிக்கை செய்து நீக்க வேண்டும்.


இல்லாவிடில் உங்கள் ஆண்டிவைரஸ் சரியாக இயங்கவில்லை என்று அர்த்தம். உடனே உங்கள் ஆண்டிவைரஸை தூக்கி விட்டு வேறு நிறுவுங்கள்.

# நாம் அனுப்பிய மெயில் படிக்கப்பட்டு விட்டதா என கண்டறிய

**நாம்** நண்பர்களுக்கோ அல்லது அலுவலக தேவைக்கோ ஏதாவது முக்கிய மெயில் ஒன்றை அனுப்புவோம். ஆனால் அந்த மெயிலுக்கு எந்த ரிப்ளையும் வராது ஏன் ரிப்ளை அனுப்பவில்லை என்று கேட்டால் நீங்கள் அனுப்பிய மெயில் எனக்கு வரவே இல்லை என்றும் நான் மெயிலை படிக்கவே இல்லை என்றும் ஒரு அபாண்டமான பொய்யை நமக்கு கூறுவார்கள். நாமும் என்ன செய்வதென்று தெரியாமல் அனுப்பிய மெயிலை திரும்பவும் அனுப்புவோம்.

இந்தப் பிரச்சினையை தீர்க்க ஒரு வழி உள்ளது. நாம் அனுப்பிய மெயிலை படித்தவுடன் நமக்கு ஒரு அறிவிப்பு செய்தி வந்தால் இந்தப் பிரச்சினையை தீர்க்கலாம். அதை எப்படி செய்வது என்று கீழே பார்ப்போம்.


- முதலில் உங்கள் மெயிலில் நுழைந்து கொள்ளுங்கள். எப்பவும் மெயில் அனுப்புவது போல Compose பகுதிக்கு சென்று நீங்கள் அனுப்ப வேண்டிய செய்திகளை எப்பவும் போல ரைப் செய்து கொள்ளுங்கள்.




- இப்பொழுது உங்கள் மெயில அனுப்ப தயாராக உள்ளதா இப்பொழுது இந்த லிங்கில் SpyPig செல்லுங்கள்.

1. உங்கள் ஈ மெயில் முகவரியை கொடுங்கள்.
2. நீங்கள் அனுப்பும் மெயிலில் சப்ஜெக்ட்டில் கொடுத்துள்ளதை இங்கு கொடுங்கள்.
3. இதில் உள்ள picture களில் உங்களுக்கு தேவையானதை தேர்வு செய்து கீழே உள்ள Create My SpyPig என்ற பட்டனை க்ளிக் செய்யவும்.
4. பட்டனை க்ளிக் செய்த உடனே கீழே வந்திருக்கும் அந்த படத்தை கொப்பி செய்து உங்கள் மெயில் பகுதியில் பேஸ்ட் செய்து விடுங்கள் இவற்றை 60 வினாடிகளுக்குள் செய்து முடிக்க வேண்டும்.


- அவ்வளவு தான் இனி நீங்கள் உங்கள் மெயிலை வழக்கம் போல அனுப்பி விடுங்கள்.
- இனி நீங்கள் அனுப்பிய மெயில் படிக்கப் பட்டவுடன் உங்களுக்கு கீழே இருப்பதை போல அறிவிப்பு செய்தி வரும்.




Email Title: Final Settlement
Sent by You: Wednesday, February 2, 2011, 9:49:29 PM (GMT +5:30)
Your IP Address: 122.176.239.217
Opened by Recipient: Wednesday, February 2, 2011, 9:52:02 PM (GMT +5:30)
2 minutes 3 seconds after you sent it
Your email has been opened 1 time
Up to 25 "opens" are tracked
Recipient Location: Mumbai, Maharashtra, India
(May be inaccurate - See notes below)
Recipient IP Address: 122.170.59.236
Recipient Application: Google Chrome 8.0.552.237 (Macintosh)
URL: [Information not available]
User Agent: Mozilla/5.0 (Macintosh; U; Intel Mac OS X 10_6_6; en-US) AppleWebKit/534.10 (KHTML, like Gecko) Chrome/8.0.552.237 Safari/534.10

- நீங்கள் மெயில் அனுப்பிய நேரமும் நீங்கள் அனுப்பிய மெயில் படிக்கப்பட்ட நேரம், இடம், கணினியின் ஐ.பி. எண் ஆகிய அனைத்து விவரங்களும் வந்திருக்கும்.
- மற்றும் எத்தனை முறை உங்கள் ஈ மெயில் ஓப்பன் செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் வரும்.
- இனி அவர்கள் உங்கள் மெயிலை ஓபன் செய்யும் ஒவ்வொரு தடவையும் உங்களுக்கு ஒரு அறிவிப்பு செய்தி வரும்.
- இதே முறையில் நீங்கள் மற்ற மெயில்களை அனுப்பினால் யாரும் நம்மிடம் மெயிலை படிக்கவில்லை என்று பொய் கூற முடியாது.

# Gmail Filters என்றால்...?





நிறைய பேருக்கு இருக்கும் ஒரே பிரச்சினை தேவை இல்லாத நபர்களிடம் இருந்து நமக்கு மின்னஞ்சல்கள் வருவது. சில சமயம் உங்களுக்கு கோடி கோடியாய் பணம் கிடைத்துள்ளது என்று கூட வரும். ஒரு நாளைக்கு குறைந்தது 50 மெயில்கள் இது போன்று வந்தால் எரிச்சலாக தான் இருக்கும். அவற்றை எப்படி Gmail Filters கொண்டு தடுப்பது. உங்களுக்கு வரும் மெயில்களை கையாள பயன்படுகிறது. தேவை இல்லாத மெயில்களை தானாகவே Delete ஆகும்படி வைக்கலாம், குறிப்பிட்ட நபர் அனுப்பும் மெயில்களை குறிப்பிட்ட Label-க்கு Move செய்யலாம், குறிப்பிட்ட மெயில்களை மட்டும் வேறு Address-க்கு Forward செய்யலாம். இன்னும் பல. குறிப்பிட்ட மின்னஞ்சலை ஓப்பன் செய்யுங்கள். இப்போது மின்னஞ்சலுக்கு மேலே உள்ள "More" என்பதை கிளிக் செய்யுங்கள். அதில் "Filter Messages Like These" என்பதை கிளிக் செய்யுங்கள்.




இப்போது Search Box-இல் Filter Window ஓப்பன் ஆகும். அதில் From என்பதில் அனுபபியவர் மின்னஞ்சல் முகவரி இருக்கும். அதேபோல அவர் அனுப்பிய மெயில்கள் இப்போது பின்னால் இருக்கும்.

இதை நிரப்புவதன் மூலம் நாம் மெயில்களை கையாளலாம்.




From - அனுப்புபவர் மின்னஞ்சல் முகவரி,To - யாருக்கு மின்னஞ்சல் அனுப்பி உள்ளார். அடிக்கடி ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு அனுப்பி இருந்தால் இதன் மூலம் கண்டுபிடிக்கலாம்.

Subject - Subject எந்த மாதிரி இருந்தால் Filter செய்ய வேண்டும் என்று தெரிவிக்க Has the words இதில் ஒரு வார்த்தை கொடுத்து Filter செய்தால் அந்த வார்த்தை உள்ள மின்னஞ்சல் மட்டும் Filter ஆகும்.


Doesn't have - மேலே உள்ளதற்கு எதிர்மறை இது. குறிப்பிட்ட வார்த்தை இல்லை என்றால் Filter ஆகும்.

Has Attachment - மேலே தகவல்களை நிரப்பிய பின் அந்த மின்னஞ்சல்களில் Attachement எதுவும் இருந்தால் அவற்றை மட்டும் Filter செய்ய இதை கிளிக் செய்ய வேண்டும்.

இப்போது Search Button மீது கிளிக் செய்து எல்லாம் சரியாக உள்ளதா என்று வடிகட்டப்பட்ட மின்னஞ்சல்களை பார்த்து தெரிந்து கொள்ளலாம். மீண்டும் More பட்டன் மீது கிளிக் செய்தால் "Create Filter" என்ற வசதி இருக்கும்.

இப்போது "Create filter with this search" என்பதை கிளிக் செய்யுங்கள். இப்போது அந்த மின்னஞ்சல்களை என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும்.

Skip The Inbox (Archive it) - இதை கிளிக் செய்தால் நேரடியாக Archive பகுதிக்கு சென்று விடும்.




Mark as read - மெயில் வந்த உடனே தானாகவே ஓபன் Read ஆகிக் கொள்ளும்.

Star it - குறிப்பிட்ட நபரின் மின்னஞ்சலுக்கு Star கொடுத்து விடும்.

Apply The Label - குறிப்பிட்ட Label-இல் Add செய்யலாம்.

Forward it to - ஏற்கனவே Fowarding செய்து இருந்தால் அதை தெரிவு செய்யலாம். இல்லை என்றால் புதிதாக Forward செய்யலாம்.

Delete it - தானாக லீட் செய்யலாம்.

Never send வை to Spam - அந்த மெயில்கள் எப்போதும் Inbox-க்கு வரும்.

Always mark it as important - முக்கியமான மின்னஞ்சல் என்று குறித்துக் கொள்ளும். Never mark வை as important - முக்கியானது அல்ல என்று எடுத்துக் கொள்ளும்.

தேவையானதை கிளிக் செய்து Create Filter என்று கொடுத்து விடுங்கள்.

அவ்வளவு தான் இனி தானாவே நீங்கள் கொடுத்த செயல் நடந்து கொண்டிருக்கும்.

# கிளிநொச்சி மின்சாரசபை அதிகாரிகளைச் சந்திக்க முடியாது மக்கள் ஏமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மின்சார சபையின் சேவைகளை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சியில் மின்சார தேவைகள் அதிகரித்து வருவதால் நாளாந்தம் பெருமளவான பொதுமக்கள் இந்த அலுவலகத்தை நாடிச் செல்வதாகவும், உரிய அதிகாரிகளைச் சந்திக்க முடியாது திருப்பி விடப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தூர இடங்களில் இருந்து வரும் பொதுமக்கள் மின்சார தேவைக்காக பல நாட்கள் அலைய வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை மின்சாரத்திற்கான அனுமதி கிடைத்தவர்கள் பலர் மின் ஒப்பந்த காரரைத் தேடி நாளாந்தம் மின்சார சபைக்கு செல்வதனால் ஒப்பந்தகாரரைச் சந்திப்பதில் பலத்த சிரமங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கும் பொதுமக்கள் இது தொடர்பில் மின்சார சபை ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே மின் அனுமதி பெற்றவர்களை விடுத்து தற்போது அனுமதி கிடைத்த சில பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதாகவும் எனவே இந்த மின் இணைப்பு அனுமதி பட்டியலின் ஒழுங்கு அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# தென்மராட்சி பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலமாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் தமது நிதி மூலமாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் முன்னெடுக்கப்படும் "அபிவிருத்தி திட்டங்களுக்கென 8 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளனர். இதன்படி வரணி இயற்றாலை மாதர் சங்கத்திற்கு கணினி கொள்வனவுக்கென 45 ஆயிரம் ரூபாவும், கிராம அபிவிருத்தி மாதர் சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும்,டிஸ்னா தையற்பயிற்சி நிலையத்திற்கு தையல் இயந்திரக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், சான்றோர் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், பவர் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், பாரதி விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், லிகோரியார் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், நவா சனசமூக நிலைய இளைஞர் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், லிகோரியார் ஆலயத்திற்கு குழாய்க்கிணறு அமைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும்:

டேனுஜா அறிவொளி மழலைகள் கல்வியகத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 15ஆயிரம் ரூபாவும், வரணி நண்பர்கள் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், பகல் பராமரிப்பு நிலையத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், சரசாலை மத்திய சனசமூக நிலையத்திற்கு குழாய்கிணறு அமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், அம்பிகை விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், காந்தி சன சமூக நிலையத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், ரட்ணா முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 20 ஆயிரம் ரூபாவும், கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு புனரமைப்புக்கென 1இலசட்த்து 50 ஆயிரம் ரூபாவும், கரம்பைக் குறிச்சி முன்பள்ளிக்கு தளபாடக்கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், ஒதுக்கியுள்ளனர்.

# அச்சுவேலி, கோப்பாய் வைத்தியசாலைகளின் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)



அச்சுவேலிப்பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் வைத்தியசாலைக் குறைபாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது கோப்பாய் வைத்தியசாலை மலசல கூடம், வெளிநோயாளர் பிரிவு புனரமைப்புக்கு 2மில்லியன் ரூபாவும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை மலசல கூடப்புனரமைப்புக்கு மூன்று இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் வைத்தியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்வதாகவும் சுகாதரர சேவை கள் பணிப்பாளர் ஆர் கேதீஸ்வ ரன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் வலி கிழக்கு அமைப்பாளரும் வலிகிழக்குப் பிரதேசசபை எதிர்க கட்சித்தலைவருமான இ. ஐங்கரன் அச்சுவேலிப் பிரதேச ஈ.பி.டி.பி.அமைப்பாளர் ம.தர்மராசா, வலிகிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர் க. சந்திரபோஸ், கோப்பாய் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரும், அச்சுவேலி வைத்தியசாலை நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர். (135)

# மோட்டார் சைக்கிள்களில் சிறுவர்கள் வீதியில் சவாரி

வலிகாமப் பகுதிகளில் சிறுவர்கள் பலர் மோட்டார் சைக்கிள் சவாரி செய்கின்றமையினால் மக்கள் வீதியில் நடமாட அஞ்சுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக ஏழாலை, மல்லாகம், கட்டுவன், குப்பிளான், மயிலங்காடு, சுன்னாகம் போன்ற பிரதேசங்களில் 18 வயதிற்கு குறைந்த, சாரதி அனுமதிப் பத்திரம் அற்ற சிறுவர்கள் மோட்டார் சைக்கிள் செலுத்திவருகின்றனர். இதனால் ஏனைய வாகனச்சாரதிகள் பொதுமக்கள் விபத்துக்களை சந்திக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

சிறுவர்கள் சிறிய ஒழுங்கை, வீதிகளில் மோட்டார் சைக்கிள்களை வேகமாக செலுத்துவதால் பாதசாரிகள் மிகவும் பயமான நிலையில் பயணிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. சம்மந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பதன் மூலமே விபத்துக்களையும் இழப்புக்களையும் தவிர்க்க முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (148)

# பதிவிருக்கப் பெட்டகம்

காந்திய சிந்தனை என்பதும் புரிதல் மற்றும் உலகியல் வாழ்வியல் நோக்கு என்பதும் ஒற்றைப் புள்ளியில் அல்லது சில கோடுகளில் வரையறை செய்து காட்டிவிட முடிவதில்லை. அப்படிப் புரிந்துகொண்ட காலத்தில், பதின்பருவ தொடக்கம் நான் காந்தி பக்தனாக இருந்திருக்கிறேன். அதே புரிதலில் காந்தியை மிகக் கடுமையாக மறுத்துமிருக்கிறேன். இதற்கு முதலில் மார்க்ஸும் பிறகு அம்பேத்கரும் வாதங்களை வழங்கியிருக்கிறார்க்ள். ஆனால் இந்தப் பாடத்திட்ட, விஞ்ஞானவாதப் புரிதலில் அடங்கி விடக் கூடியதில்லை காந்தி என்ற நிகழ்வு என்கிற புரிதல். அறிதல் ஏற்பட்டபின் பக்தியும் இல்லை, மறுப்பும் இல்லை. இது பேசவேண்டிய, புரிய வேண்டிய, சரிபார்க்க வேண்டிய ஒரு பெரும் நிகழ்வு நிலை என்பது மனவயப்பட்டுள்ளது. மார்க்ஸ், அம்பேத்கர் போன்று வியக்க வைக்கும் மேதமையல்ல காந்தியின் அடிப்படை; ஒருவித கவித்துவ அற நம்பிக்கை. அதில் சில போதாமைகளும், அறிதல் குறைகளும் இருக்கலாம். ஆனால் பாசிசமோ, மனித ஒடுக்குதலோ இருக்க முடியாது. ஏனெனில் இறுதி தண்டனை என்ற கருத்தியல் இதில் மறுக்கப்பட்டுள்ளது.

நவீன சிந்தனைகளில், செயல்திட்டங்களில் காணப்படும் ஹிட்லர் வகை பாசிசமும் அடக்குமுறையை நியாயப்படுத்திய ஸ்டாலினிசமும் மிகப் புராதனமான ஒரு வன்முறையை அடிப்படையாகக் கொண்டவை. 'பிறர்' மற்றும் 'பகைவர்' என்ற வரையறைகள் மூலம் வெளியேற்றும் வெறுப்பு அரசியலே இவற்றின் பலமான அடிப்படைகள். அழித்தொழிப்பு, கொன்றொழிப்பு, சித்திரவதை, தடமழிப்பு என்பவை இவற்றின் நியாயப்படுத்தப்பட்ட வழிமுறைகள். 'பகைமை ஒழிப்பு' என்ற நியாயவாதத்தின் மூலம் இவை எதையும் எவரையும் இல்லாமலாக்கி விடமுடியும். இந்த வெறுத்தல், வெளியேற்றல் அரசியலுக்கு மாற்றான ஒருவித 'உள்ளடக்கும்' 'தன்வழிப்படுத்தும்' அரசியல்தான் காந்தியின் அரசியல். இந்த உள்ளடக்கும் தன்மை 'பன்மைத்துவ' அடையாளங்களைக்கூட மதிப்பு மிக்கவையாக ஏற்கவைக்கும் நிலையை 'காந்திய வழி' அரசியல் உருவாக்கித் தருகிறது.

இது இன்றைய சூழலில் மட்டுமல்ல இதுவரையிலான 'ஆயுதமைய' உலக அரசியல் மற்றும் சமூக மதிப்பீடுகள் அனைத்தின் பின்புலத்திலும் மிகமிக மாறுபட்டதும் முக்கியத்துவம் உடையதுமாகிறது. பிறரை அழிப்பதன் மூலமும், ஒழுங்குகளைத் திணிப்பதன் மூலமும் மாற்றமும் தூயமைப்படுத்துதலும், விடுதலையும் கிடைத்துவிடும் என்ற பாசிச பொது நம்பிக்கை வன்முறைக்கு மாற்றாக விடுதலை மற்றும் மாற்றத்தை தன்னிலிருந்து தொடங்கும் அறம் தான் காந்தியத்தில் மதிப்பிற்குரிய ஒன்றாக முன்நிற்கிறது.

– பிரேம்

காந்தி மிக முக்கியமான திருப்புமுனையை இந்திய அரசியலில் ஏற்படுத்தினார். அதுவரை வெள்ளைக்காரர்களிடம் அதிகாரப் பகிர்வு, சுயாட்சி என்ற அடிப்படையில் இயங்கி வந்த அரசியல் சொல்லாடலை முற்றிலும் புதிய திசையில் திருப்பினார். வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் இருப்பதோ, ஆட்சி செய்வதோ பிரச்சினையில்லை, ஆனால் அவர்கள் நாட்டின் நவீன உற்பத்தி முறை மற்றும் அரசியல் நிர்வாக அம்சங்களை இங்கே இறக்குமதி செய்யக்கூடாது என்றார். வேறு வார்த்தைகளில் சொன்னால் இந்திய மக்கள் அவர்கள் வாழ்வை மேற்குலகிலிருந்து வேறுபட்ட விதத்தில் வடிவமைத்துக்கொள்ளும் உரிமையைப் பெறுவதே சுயராஜ்யம் என்றார். எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் நடப்பது போலவே அவர் மஹாத்மாவாக்கப்பட்டார், ஆனால் அவர் கருத்திற்கு நேர்மாறாக ஆட்சியதிகாரம் மட்டுமே இந்தியர்கள் கைக்கு வந்தது. இந்தியா மேற்கத்திய உற்பத்தி மற்றும் நிர்வாக வழிமுறைகளை பின்பற்றத் தொடங்கியது. இந்தியா வல்லரசாக மாறவேண்டும் என்பது அனைவரும் சூல்கொள்ள வேண்டிய மனக்கிடக்கையாக மாறியது. எதற்காக இந்தியா வல்லரசாக வேண்டும் உகாண்டாவோ, சிலியோ, நேபாளமோ, மாலைதீவோ உலக வல்லரசாக மாற முடியுமா? அப்படி மாறாததால் அவர்களுக்கு ஏதாவது பிரச்சினையா என்று யாரும் யோசிப்பது சாத்தியமற்றுப் போனது.

– ராஜன்குறை

# 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



## அமரர்

# வேலுப்பிள்ளை தங்கரத்தினம்

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும், மாவடி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத்தெய்வத்தின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர் -

இப்பூவுலக வாழ்வை எமக்காக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த எம் அன்புத் தெய்வமே!
எங்கள் அத்தனை உயர்வுகளிலும்உங்களின் முயற்சிகள் எத்தனை, எத்தனை.
“மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும்” எனச் சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டியவரே
ஆலமரமாக நின்று அனைவருக்கும் வாழ்வு தந்தவரே உங்களின் வேர்களின் வீரியத்தில்
விழுதுகள் நாம் கிளை பரப்பியுள்ளோம். வேரைத் தேடுகின்றோம் விருப்புடனே நன்றி சொல்ல
எழுந்து வர மாட்டீரோ? உங்கள் அன்பை நினைத்து ஆர்ப்பரிப்பதைத் தவிர ஆறுதல் என்ன
அம்மா எங்களுக்கு. விழிநீர் சொரிந்து நிற்கின்றோம் விண்ணிலிருந்து வாழ்த்துங்களேன்.

குடும்பத்தினர் சார்பில்:
வேலுப்பிள்ளை மகேந்திரன் (வள்ளுவன்)
முன்னைநாள் தலைவர் வலி.மேற்கு பிரதேச சபை,
முன்னைநாள் உப தலைவர் சங்கானை ப.நோ.கூ. சங்கம்

திருஞானசம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.

(C/2001)

# க.பொ.த. (சாதாரணதர)
# அலகு ரீதியான பயிற்சி

**விஞ்ஞானம்** **(10.2, 11.3, 11.5)**

ஆசிரியர் : T.S.ஜனார்த்தனன் (B.sc)

*அலகுகள் 11.2 அளவறி இரசாயனவியல்*

1. காபன் அணுவின் திணிவின் 1/12 மடங்கு திணிவுக்கு .............................. எனப் பெயர் வழங்குகின்றனர்.

2. அணுவொன்றின் திணிவுக்குக் காரணமான துணிக்கைகள் .............................., .............................. என்பவையாகும்.

3. அணுக்களில் இரசாயன மாற்றத்தில் பங்குகொள்ளும் துணிக்கை .............................. ஆகும்.

4. மூலகத்தின் அணுவொன்றின் திணிவுக்கும், காபன் 12 அணுவொன்றின் திணிவின் 1/12 மடங்கு திணிவுக்கும் இடையிலான விகிதம் .............................. எனப்படும்.

5. Na = 23, C= 12, O =16 சோடியம் காபனேற்றின் சூத்திரத்திணிவு .............................. ஆகும்.

6. இரசாயனத் தாக்கமொன்றில் ஈடுபடும் கூறுகள் .............................. எனவும் தாக்கத்தின் விளைவாக தோன்றும் கூறுகள் .............................. எனவும் அழைக்கப்படும்.

7. இரசாயனத் தாக்கமொன்றில் பங்குகொள்ளும் கூறுகளை அவற்றின் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதினால் அது .............................. என அழைக்கப்படும்.

8. இரசாயனத் தாக்கமொன்றில் தாக்கிகளிலுள்ள அணுக்களின் எண்ணிக்கையும் விளைவுகளிலுள்ள அணுக்களின் எண்ணிக்கையும் சமனாக இருப்பதால்தான் .............................. ன் திணிவும், .............................. ன் திணிவும் சமனாக இருக்கின்றது.

9. $CaCO_3 = CaO + CO_2$ என்ற இரசாயனச் சமன்பாட்டில் (Ca=40, C=12, O=16) 100 kg $CaCO_3$ ன் வெப்பப்பிரிகையால் .............................. கல்சியம் ஒட்சைட்டும், .............................. காபனீரொட்சைட்டும் கிடைக்கும். 22 கிராம் காபனீரொட்சைட் வாயு கிடைப்பதற்கு தேவையான கல்சியம் காபனேற்றின் திணிவு .............................. ஆகும்.

10. இரசாயனச் சமன்பாடுகள் தொடர்பான கணித்தல்களில் சமன்பாடுகள் .............................. செய்யப்படுவதால் தாக்கிகளிலுள்ள .............................. எண்ணிக்கையும் விளைவுகளிலுள்ள .............................. எண்ணிக்கையும் சமனாக இருக்கும்.

11. இரசாயனச் சமன்பாடுகள் தொடர்பான கணித்தல்களை மேற்கொள் வதற்கு .............................. சமன்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

12. இரசாயனச் சமன்பாடொன்றின் மூலம் அறிந்துகொள்ளக்கூடிய தகவல்களாவன
   1.
   2.
   3.

13. இரசாயனச் சமன்பாடொன்றின் மூலம் அறிந்துகொள்ள முடியாத தகவல்களாவன.
   1.
   2.

14. திரவப் பெற்றோலிய வாயுவின் பிரதான கூறு பியூட்டேன் ஆகும். இதன் சூத்திரம் .............................. ஆகும். இதன் பூரண தகனத்தால் .............................. சுவாலை கிடைப்பதுடன் விளைவுகளாக .............................., .............................. கிடைக்கும்.

15. நீர்சேர் செப்புசல்பேற்றின் சூத்திரம் .............................. ஆகும். இதனைச் சூடாக்குவதால் .............................. கிராம் நிறைக்குறைவு ஏற்படுவதுடன் வெண்நிற மீதி பெறப்படும். இதன் சூத்திரம் .............................. ஆகும்.

16. ஐதரசன் வாயுவும் ஒட்சிசன் வாயுவும் இடைத்தாக்கமுறுவதால் கிடைப்பது .............................. ஆகும். இதற்கான ஈடுசெய்த இரசாயனச் சமன்பாடு .............................. + .............................. = .............................. சமன்பாட்டின்படி 90 கிராம் விளைவினை பெறத் தேவையான ஐதரசன் வாயுவினதும் ஒட்சிசன் வாயுவினதும் திணிவுகளை தனித்தனியே அறிக.

17. சோடியம் ஐதரொட்சைட் ஒரு மூலமாகும். ஐதரோகுளோறிக்கமிலம் ஓர் அமிலமாகும். இவை இடைத்தாக்கமுறுவதால் கிடைக்கும் இரு பதார்த்தங்களும் .............................. தன்மையானவையாகும். இத்தாக்கத்தின்போது அவதானமாக .............................. ஐ குறிப்பிடலாம்.

18. NaOH + HCI = .............................. + ..............................

19. தெங்கு, தென்னை போன்ற பயிர்களுக்கான உரமாக டொலமைற் பயன்படுத்தப்படுகின்றது. இதிலடங்கியுள்ள இரு பிரதான சேர்வைகளு மாவன. .............................., ..............................

20. $(NH_4)_2\ SO_4$ என்ற சேர்வையிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை ..............................

1. கீழே தரப்படும் சேர்வைகளுடைய சூத்திரத் திணிவுகளை அறிக. (Na =23, H= 1, C =12, N=14, O =16, Ca =40, S =32, Pb =207, Cu =64)
   i) $NaHCO_3$   ii) $(NH_4)_2\ SO_4$   iii) $CO(NH_2)_2$
   iv) $Pb(NO_3)_2$   v) $Na_2CO_3$   vi) $CaCO_3$
   vii) $CuSO_4$   viii) $AgNO_3$   ix) $(NH_4)_2CO_3$
   x) $H_2SO_4$

2. கீழே தரப்படும் தாக்கங்களுக்கான இரசாயனச் சமன்பாடுகளை ஈடுசெய்து எழுதுக.
   1. மக்னீசியம் ஐதரோக்குளோறிக்கமிலத்துடன் இடைத்தாக்கமடைதல்.
   2. சோடியம் காபனேற் ஐதரோக்குளோறிக்கமிலத்துடன் இடைத்தாக்கமடைதல்.
   3. ஐதரசன்பரஒட்சைட் வெப்பத்தால் பிரிகையடைதல்.
   4. பொட்டாசியம் ஐதரொட்சைட் காபனீரொட்சைட் வாயுவை உறிஞ்சுதல்.
   5. நைதரசன் வாயு ஐதரசன் வாயுவுடன் தாக்கம் புரிதல்.

3. மெதேன் வாயுவின் பூரண தகனத்தால் விளைவுகளாக காபனீரொட் சைட்டும் நீரும் விளைவுகளாகக் கிடைக்கின்றது.
   1. குறித்த வாயு எதன் பிரதான கூறு ஆகும்.
   2. குறித்த தாக்கத்துக்கான ஈடுசெய்த இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.
   3. 6.4 கிராம் மெதேன் வாயுவின் பூரண தகனத்தால் கிடைக்கும் விளைவுகளின் திணிவை தனித்தனியே அறிக.

4. இது இயற்கையில் உருவாகும் சந்தர்ப்பம் ஒன்று தருக.

*அலகுகள் 11.3 உலோகங்களும் அவற்றின் உபயோகமும்.*

I 1. உலோகங்கள் யாவற்றுக்கும் உரிய பொதுப்பண்புகள் பல உள்ளன. இருப்பினும் உலோகங்களிடையே வேறுபடும் பண்புகள். .............................. .............................. ..............................

2. மூலகங்கள் வளியுடன் இடைத்தாக்கமுறுவதால் மூலக ஒட்சைட்டுகள் பெறப்படும். உலோகங்கள் வளியுடன் இடைத்தாக்கமுறுவதால் .............................. விளைவாகக் கிடைக்கும். இவை .............................. மீதிகளாகக் காணப்படும். இவை .............................. இயல்புடையவை. இதன் காரணமாக ஈரமான .............................. பாசிச்சாயத்தாளை .............................. மாற்றும். ஆயினும் பாசிச்சாயத்தாளில் மாற்றம் எதையும் ஏற்படுத்தாது.

3. சில உலோக ஒட்சைட்டுக்கள் மாத்திரம் நீரில் கரைந்து .............................. தருகின்றன. எல்லா உலோகங்களும் வளியுடன் ஒரே விதமாக இடைத்தாக்கம் அடைவதில்லை. .............................., .............................., .............................. போன்ற உலோகங்கள் வளியுடன் உக்கிர தாக்கத்தைக் காட்டும். காரத்தன்மையான பதார்த்தங்கள் பயன்படும் சந்தர்ப்பங்க ளாவன .............................., .............................., ..............................

4. உலோகங்கள் மின்கடத்திகளாகும். மின் கடத்தும் ஆற்றல் ஒவ்வொன் றிற்கும் .............................. இதேபோன்று வெப்பம் கடத்தும் ஆற்றல், வெப்பத்துக்கு .............................. ஆற்றல் என்பன உலோகத்துக்கு உலோகம் வேறுபடும்.

5. ஈருலோகச்சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு தெரிவுசெய்யும் உலோகங் கள் இரண்டும் .............................. விரிவைக் காட்டுவனவாக இருத்தல் இன்றியமையாததாகும். தன்னிச்சையாக மூடித்திறக்கும் ஆளிகளில் எல்லாம் .............................. பயன்படுகின்றது. குறித்த ஆளிகள் பயன்படும் அமைப்புகளாவன
   1. ..............................   2. ..............................   3. ..............................
   4. ..............................   5. ..............................   6. ..............................

6 இரும்பிலும் பார்க்க கூடுதலாக விரிவடையக்கூடிய கலப்புலோகம் .............................. ஆகும். உலோகங்களின் பிரதான பயன்பாடுகளில் ஒன்று சமயல் பாத்திரங்கள் தயாரித்தலாகும். அலுமினியம் சமயல் பாத்திரம் தயாரிப்பதில் பயன்படுவதற்கான காரணங்கள்
   1. ..............................

7. தடைத்திறன் கூடிய உலோகங்கள் .................................. குறைந்தவையாக இருக்கின்றன. மின்குமிழ்களில் பயன்படும் ............................................ என்ற தூய உலோகமும் மின்வெப்ப சாதனங்களில் பயன்படும் .................. .............. என்ற கலப்புலோகமும் மேற்கூறிய இயல்புகளைக் கொண்டவையாகும். மேற்கூறிய உலோகங்களுக்கு ................................ உயர்வாக இருப்பதும் ஓர் இயல்பாகும்.

8. கடத்தியூடாக மின்பாயும்போது கடத்தி வெப்பமடைவதற்கு அது ........................ கொண்டிருத்தல் அவசியமாகும். மின்வெப்பசாதனங்களில் மின்மூலமாக ............................ பயன்படும் அதேவேளை வெப்ப மூலமாக ...................................... பயன்படும்.

**II பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளியை நிரப்புக.**

| *உலோகம்* | *பிரதான கூறுகள்* | *இயல்புகள்* | *பயன்பாடுகள்* |
|---|---|---|---|
| ........................ | தூய உலோகம் | ........................ | சமயல் பாத்திரம், மின்வடம், கலப்பு லோகத் தயாரிப்பு |
| டியுரலுமின் | ........................<br>........................<br>........................ | 1. பரமற்றது<br>2. இலேசானது | 1. ........................<br>2. ........................ |
| செம்பு | ........................ | 1. ........................<br>2. ........................<br>3. ........................<br>4. ........................ | 1. மின்வடம்<br>2. செப்புக்குழாய், செப்புத்தகடு உற்பத்தி |
| பித்தளை | 1. ........................<br>2. ........................ | 1. அரிப்புக்குள்ளாகாது<br>2. நற்கடத்தி<br>3. நொருங்கக்கூடியது.<br>4. செப்பிலும் அதிக விறைப்பானது. | 1. ........................<br>2. ........................<br>3. ........................<br>4. ........................ |
| மென்பற்றாசு | 1. ........................<br>2. ........................ | 1. ........................<br>2. ........................ | பற்றாசு பிடிப்பதற்காக உதவுதல். |
| நிக்கல்கலப்பு லோகம் | 1. ........................<br>2. ........................<br>3. ........................ | 1. ........................<br>2. ........................<br>3. ........................ | தீப்பொறிச் சொருகி தயாரித்தல் |
| ........................ | 1. ........................<br>2. ........................ | 1. விரைவில் வெப்பத்தை உறிஞ்சும்<br>2. நீரால் பாதிப்புக்குள்ளாக மாட்டாது. | மோட்டார் வாகன கதிர்வீச்சு தயாரிப்பு |

A. தூய உலோகங்களிலும் பார்க்க கலப்புலோகங்கள் .................... உருகுநிலை கொண்டவை. அத்துடன் உறுதித்தன்மை உடையவையாகவும் காணப்படுகின்றன. இரும்புடன் .............................. உலோகத்தைக் கலப்பதன் மூலம் கறையில் உருக்கு தயாரிக்கப்படுகின்றது. உலகில் அதிக பாவனையில் காணப்படும் கலப்புலோகம் ................................ ஆகும். உருக்கின் பண்புகள் ........................... .............................. ஏற்ப மாறுபடலாம்.

B. உருக்குத் தயாரிப்பில் பன்றி இரும்புடன் ................................ ....................

பயன்படுத்தப்படுகின்றன. முதலில் அறியப்பட்ட கலப்புலோகம் ............................ ஆகும். முதலில் அறியப்பட்ட தூய உலோகம் ............................ ஆகும். மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் சத்திர சிகிச்சைக்கருவிகள் பெரும்பாலும் கறையில் உருக்கினால் தயாரிக்கப்படுகின்றன. சிலைகள் தயாரிப்பில் .................................. பயன்படுத்தப்படும்.

***வளியிலுள்ள ஒட்சிசனுடன் சில உலோகங்கள் காட்டும் இடைத்தாக்கம்.***

சோடியம், கல்சியம், மக்னீசியம் ஆகிய உலோகங்களை வளியில் வெப்பப்படுத்தும்போது சுவாலையின் நிறங்கள் முறையே ......................

......................... ஆகிய உலோகங்களை மூடி ஒட்சைட்டுப் படை இருப்பதால் கடுமையாக வெப்பப்படுத்தினாலும் எரியமாட்டாது. ஆனால் நாகத்தூள் வெப்பப்படுத்தும்போது .................... சுவாலையுடன் எரியும்.

$Na + O_2$ = ....................

$K + O_2$ = ....................

$Ca + O_2$ = ....................

$Mg + O_2$ = ....................

$Al + O_2$ = ....................

மேலே தரப்பட்ட இரசாயனச் சமன்பாட்டின் விளைவுகளை குறிப்பிட்டு சமன்பாடுகளை சமன்செய்க.

**வெவ்வேறு உலோகங்கள் நீருடன் தாக்கம் புரிதல்**

குளிர்ந்த நீரினுள் நீல, சிவப்பு பாசிச்சாயத்தாள்களை இட்டு அவதானித்தோமாயின் தாள்களில் எவ்வித மாற்றமும் தென்படாது. சோடியம், பொட்டாசியம், கல்சியம் போன்ற உலோகங்களில் ஏதாவது ஒன்றை இட்டு தாக்கத்தின் பின் அவதானித்தோமாயின் ...................... , .................................... நிறமாக மாறியிருக்கும். இதிலிருந்து இங்கு தோன்றிய விளைவு காரக் கரைசலாகும். உலோகங்கள் நீருடன் இடைத்தாக்கம் புரிந்தால் வாயு விளைவாக ............................ பெறப்படும். பொட்டாசியம், சோடியம் நீருடன் மிக உக்கிரமாக தாக்கம் புரிந்து தோன்றும் வாயு பெரும்பாலும் ........................ சோடியம், பொட்டாசியம் என்பவற்றுடன் ஒப்பிடும்போது கல்சியம் நீருடனான தாக்கம் சிறிது குறைவானதாக இருக்கும். விளைவுகள் ................................ ஆகும்.

$Na + H_2O = NaOH + H_2$

$K + H_2O = KOH + H_2$

$Ca + H_2O = Ca(OH)_2 + H_2$

மேலே தரப்பட்ட இரசாயனச் சமன்பாடுகளை ஈடுசெய்து எழுதுக.

மக்னீசியம் குளிர்நீருடன் மிகவும் .................. தாக்கத்தையே காட்டும்.

குளிர்ந்த நீருடன் தாக்கம் எதனையும் காட்டமாட்டா. குளிர்நீருடன் தாக்கமுறுவதிலும் பார்க்க வெந்நீருடனான உலோகங்களின் தாக்க ............................

**கொதிநீராவியுடன் உலோகங்களின் தாக்கவீதத்தை ஒப்பிடல்**

உலோகங்கள் கொதிநீராவியுடன் இடைத்தாக்கம் புரிவதால் விளைவுகளாக ................................, ........................ என இரு விளைவுகள் பெறப்படும். ................................, ............................... , ........................ ஆகிய உலோகங்கள் கொதிநீராவியுடன் மிகவும் உக்கிரமான தாக்கத்தைக் காட்டும். தாக்கத்தைக் காட்டும் வேறு உலோகங்களாவன மக்னீசியம், அலு மினியம், நாகம் ...................... போன்றவையாகும். ............................ கொதிநீராவியுடன் தொடர்ந்து தாக்கத்தைக் காட்டமாட்டாது. காரணம் ........................ ஆகும். ஈயம், வெள்ளி, செம்பு, தங்கம், வெள்ளீயம், இரசம், பொன், பிளாற்றினம் ஆகியன ..................., ........................ தாக்கம் எதனையும் காட்டமாட்டா.

கொதிநிராவியுடன் தொடர்புடைய தாக்கங்கள்

$Mg + H_2O = MgO + H_2$

$Al + H_2O$ = ................ + ..................

$Al + H_2O$ = ................ + ..................

$Zn + H_2O$ = ................ + ..................

$Fe + H_2O$ = ................ + ..................

மேலேயுள்ள தாக்கங்களின் விளைவுகளை எழுதி சமன்பாட்டை சமன்செய்க.

**அமிலங்கள் உலோகங்களுடன் காட்டும் இடைத்தாக்கம்**

ஐதான சல்பூரிக்கமிலம், ஐதான ஐதரோக்குளோறிக் அமிலம் என்பவற்றுடன் உலோகங்கள் தாக்கமுறுவதால் கிடைக்கும் வாயு விளைவு ............................ ஆகும். K, Na, Ca, Mg, Al, Zn, Fe ஆகிய உலோகங்கள் மேற்குறித்த இரு அமிலங்களுடனும் தாக்கம் புரியும். பொட்டாசியத்திலிருந்து இரும்பு வரை தாக்கவேகம். .................... மேற்குறித்த இரு அமிலங்களுடனும் தாக்கத்தை காட்டமாட்டாத உலோகங்களாவன ..................... ........................ .......................... போன்றவையாகும்.

ஐதான அமிலங்களிலும் பார்க்க செறிந்த அமிலங்களுடன் உலோகங்களின் தாக்கம் .............................. இருக்கும்.

அமிலங்களுடனான இடைத்தாக்கத்தைக் காட்டும் சில இரசாயனச் சமன்பாடுகள்

1. $Mg + HCl = MgCl_2 + H_2$
2. $Mg + H_2SO_4 = MgSO_4 + H_2$
3. $Zn + H_2SO_4 = ZnSO_4 + H_2$
4. $Zn + HCl = ZnCl + H_2$

1. குறித்த தாக்கங்களில் விளைவுகளின் பெயர்களை எழுதுக.
2. குறித்த சமன்பாடுகளை சமன்செய்து எழுதுக.

வளியுடன், நீருடன், அமிலங்களுடன் உலோகங்கள் தாக்கம் புரியும் வீதத்தை அவதானித்து அமைக்கப்பட்ட தொடரே ............... ஆகும் இத்தொடரில் அடங்கும் மூலகங்களின் ஒழுங்கு K, Na, ........., Mg, ............, Zn, Fe, .........., .........., Cu, .........., Ag, ..............., Au தாக்கத்தொடரில் மேலிருந்து கீழாகச் செல்லும் போது தாக்கவேகம் ............................

# வலுவடைகிறது இந்திய வான்படை

(புதுடில்லி)

இந்திய விமானப்படை 20 அதிநவீன ஜெட் போர் விமானங்களை பிரிட்டிஷ் ஏரோஸ் பேஸ் (பி.ஏ.இ.) சிஸ்டம்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கவுள்ளது.


இந்திய விமானப்படைக்காக பிரித்தானியாவைச் சேர்ந்த பி.ஏ.இ. சிஸ்டம்ஸ் நிறுவனத்திடமிருந்து 66 அதிநவீன ஜெட் விமானங்களை வாங்க கடந்த 2004 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதன் பின்னர், மேலும் 57 ஜெட் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கையெழுத்தானது.

அவற்றில் 17 விமானங்கள் இந்தியக் கடற்படைக்கு பயிற்சி நோக்கில் பயன்படுத்தப்பட உள்ளநிலையில், பி.ஏ.இ. சிஸ்டம்ஸ் நிறுவனத்திடமிருந்து மேலும் 20 அதிநவீன ஜெட் போர் விமானங்களை வாங்குவதற்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தலைமையிலான இராணுவக் கொள்முதல் குழு கடந்த ஆண்டு நவம்பரில் ஒப்புதல் அளித்தது.

இவை விமானப் படையின் 'சூரியகிரண்' பிரிவுக்காக வாங்கப்படவுள்ளன.

ஜெட் விமானக் கொள்முதல் திட்டத்தின் மதிப்பு ரூ.20 ஆயிரம் கோடிக்கும் அதிகம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.



இதனிடையே, ஜெட் விமானங்களுக்கான பொருள்களையும், சேவைகளையும் வழங்குமாறு கோரி, இந்திய விமானப்படை எழுதிய கடிதம், பி.ஏ.இ. சிஸ்டம்ஸ் நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளது.

இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளில் இவை வழங்கப்பட உள்ளன.

இந்தப் பொருட்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்பு, அவற்றைக் கொண்டு ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் பெங்களூரில் ஜெட் விமானங்களை உருவாக்கும் பணியில் ஈடுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உத்தரப்பிரதேசத்தில் வெள்ளம் பொதுமக்கள் 45 பேர் உயிர்ப்பலி

(புதுடில்லி)



உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தர காண்ட் மாநிலங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 45 பேர் பலியாகியுள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் பெய்த கன மழையால் ஏற்பட்ட விபத்து மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கி இதுவரை 12 பேர் பலியாகியுள்ளனர்.

நேற்று மாலை வரை அலகாபாத்தில் 66.8 மி.மீ மழையும், வாரணாசியில் 43.3 மி.மீ மழையும் பதிவாகியுள்ளது.

மழை வெள்ளத்தால் பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் அன்றாட வாழ்க்கை சீர்குலைந்துள்ளது.

உத்தரகண்ட் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவில் 35 பேர் மாயமாகியுள்ளனர். மேலும் 33 பேர் பலியாகியுள்ளனர். மாநிலத்தில் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் மட்டுமே மிக அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

35 பேரில் மாயமானவர்களில் 29 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளாதக நிவாரண பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இராணுவத்தினர் மற்றும் இந்திய திபெத்திய எல்லைப் பாதுகாப்பு படை பொலிஸாரும் மீட்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

# "றோ" அலுவலகத்தில் வெடித்தது குண்டு

## மணிப்பூரில் பரபரப்பு

(புதுடில்லி)

மணிப்பூர் மாநிலத்தில் இந்திய புலனாய்வு அமைப்பான "றோ" அலுவலகத்தில் குண்டு வெடிதததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இம்பால் நகரிலிருந்து மேற்கு மாவட்டத்தில் மத்திய அரசின் வெளிவிவகாரத்துறை புலனாய்வு நிறுவனமான றோ (Research and analysis wing) அமைப்பின் அலுவலகம் உள்ளது.

இந்த அலுவலக வளாகத்தில் திடீரென குண்டு வெடித்தது. இதில் உயிர் சேதம் ஏற்பட்டதாக தகவல் இல்லை. எனினும் வளாகத்தில் உள்ள மரங்கள் தீப்பிடித்தன.

பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார். மேலும் இது உள்ளூர் தீவிரவாதிகளின் திட்டமிட்ட சதிச்செயல் எனக் கூறப்படுகிறது.

இக்குண்டுவெடிப்பிற்கு எந்த அமைப்பு பொறுப்பேற்றுள்ளது என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# அகிம்சைப் போராட்டத்துக்கு ஆப்பு

(புதுடில்லி)

தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் நேற்றுமுன்தினம் கடலுக்குள் இறங்கிப் போராட்டம் நடத்தினார்கள் இடிந்தகரை மக்கள்.

அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தியாவின் கடலோர காவல்படை விமானம் மிக தாழ்வாக பறந்து கொண்டு கண்காணிப்பில் இருந்தது. விமானம் மிக தாழ்வாக பறந்ததில் தூண்டில் வளைவு பாலத்தில் நின்று கொண்டிருந்த சகாயம் என்பவர் நிலை தடுமாறி கீழே விழுந்தார்.

மக்கள் பலரும் இப்போராட்டத்தில் கலந்துகொண்ட போது சிலர் தூண்டில் பாலத்தில் நின்றபடி போராட்டத்தை பார்த்தனர்.

அப்போது பல முறை விமானம் மிகத் தாழ்வாக பறந்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தி குழந்தைகளைப் பயமுறுத்தியது. விமானம் மிகமிக தாழ்வாக பறக்கும் போது பாலத்தில் இருந்து கைக்கு எட்டும் தூரத்தில் விமானம் இருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

அந்தச் சமயத்தில்தான் பாலத்தல் இருந்து சகாயம் கீழே விழுந்துள்ளார். கீழே விழுந்தவர் காயங்களுடன் ஜெயசேகரன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சகாயத்திற்கு திருமணம் ஆகி குழந்தைகளும் உண்டு.

இந்த செய்தியை கேட்ட தமிழர்கள் மிகவும் கொதித்து போயுள்ளனர். காரணம், இது வரை 550 இற்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லபட்ட போது பாதுகாப்புக்கு வராத இந்திய கடலோர காவல் படை, இப்போது தங்கள் வாழ்வாதாரத்திற்கு போராடும் மக்களை குறிவைத்து வானில் பல நூறு முறை பறந்து செல்கிறது.

எவ்வளவு முறையிட்டும் இந்திய அரசு மக்களை காக்க. இது போல விமானம் மூலம் கண்காணிக்கவில்லை என்றும தெரிவித்தனர்.


# PROVINCIAL SPORTS FESTIVAL - 2012


## NORTHERN PROVINCE




ஊடக அனுசரணை: தினமுரசு

Organized By -: Department of Sports

# லிபியாவை நெருங்குகிறது அமெரிக்க யுத்தக்கப்பல்



லிபியாவை தாக்கும் எண்ணத்துடன் போர்க் கப்பல்களை அனுப்பவில்லை என அமெரிக்க பாதுகாப்பு துறையின் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

லிபியாவின் பெங்காசி நகரில் அமெரிக்க தூதர் உள்ளிட்ட 4 அமெரிக்க அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்து, லிபிய கடல்பகுதிக்கு இரு அமெரிக்க போர்க் கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. லிபியா மீது தாக்குல் நடத்தவே இந்த கப்பல்களை அமெரிக்கா அனுப்பியுள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜார்க் லிட்டில் கூறுகையில், சில நேரங்களில் மத்திய தரைக்கடல் பகுதிக்கு அமெரிக்க கப்பல்களை அனுப்புவது வழக்கமான ஒன்றுதான். லிபியாவைத் தாக்க வேண்டும் என்பதற்காக போர்க் கப்பல்களை அனுப்பவில்லை. அப்பகுதியில் எந்த நாட்டின் மீதும் இந்த போர்க் கப்பல்கள் தாக்குதலில் ஈடுபடாது என்றார்.

இதனிடையே பெங்காசி நகரில் நடைபெற்ற தாக்குதலில் உயிரிழந்த மற்ற 3 அமெரிக்க அதிகாரிகள் குறித்த தகவல் தெரியவந்துள்ளது.

இதில் இருவர் அமெரிக்க கடற்படையின் சிறப்பு அதிரடிப் படையில் முன்பு பணியாற்றியவர்கள். மற்றொருவரும் தூதரகத்தின் தகவல் நிர்வாக மேலாளராகப் பணியாற்றி வந்தவர்.

இறந்தவர்களின் குடும்பத்துக்கு அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

லிபியாவுக்கான அமெரிக்க தூதர் கொல்லப்பட்டது குறித்துப் பேசிய ஜனாதிபதி ஒபாமா, லிபியாவில் திட்டமிட்டு அமெரிக்க தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் நமது சகோதரர்கள் 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்குக் காரணமான அனைவரும் நீதிக்கு முன்பு நிறுத்தப்படுவார்கள். பயங்கரவாதம் எந்த வகையில் தலையெடுத்தாலும் அதை அழிப்போம் அனைத்து மதங்களையும் மதித்து வந்துள்ளதே அமெரிக்காவின் வரலாறு.

இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் உட்பட பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் நமது நாட்டில் உள்ளனர். நாம் ஒரு குறிப்பிட்ட மதத்தின் எதிர்ப்பாளர்கள் என்ற சாயத்தைப் பூச நினைக்கிறார்கள். அது எப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒரு திரைப்படத்தை மையமாக வைத்து வன்முறையில் இறங்குவதை நியாயப்படுத்த முடியாது என்றுதெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத்திரைப்படத்துக்கு ஐ.நா. சபை கடும் கண்டனம்



முஸ்லிம்களை மோசமாக சித்தரித்து அமெரிக்கா வெளியிட்ட திரைப்படத்திற்கு ஐ.நா பொதுச் செயலாளர் பான்-கி- மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது பற்றி பான்- கி- மூன் கூறுகையில், இந்த திரைப்படம் கொலை முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக வேண்டுமென்றே உருவாக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டினார்.

ஐ.நா உயர் பிரதிநிதி ஜார்ஜ் காம்பியோ, இவ் விவகாரம் குறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் கிளிண்டனுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் தற்போது ஏற்பட்டுள்ள வெறுப்பான சூழ்நிலை, ஆபத்தான நிலைமை மற்றும் தாக்குதல்கள், மத அடிப்படையிலான வன்முறைகள் ஆகியவை கவலை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஐ.நா பாதுகாப்பு சபையும், 15 நாடுகளின் பிரதிநிதிகளும் இவ்வாறான வன்முறை சம்பவங்களுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது குறிப பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# முகமது நபியை அவமதிப்பதா? அமெரிக்கத்தூதரகம் மீது தாக்குதல்

எகிப்து தலைநகர் கெய்ரோவில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது இரண்டாவது தடவையாக மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது.

முகமது நபியை அவமதிக்கும் வகையில் இஸ்ரேலிய அமெரிக்கர் ஒருவர் திரைப்படம் தயாரித்துள்ளதாக வெளியான செய்தியை அடுத்து லிபியா, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்காவுக்கு எதிராக போரராட்டம் நடத்தப்பட்டது. அங்குள்ள அமெரிக்க தூதரகங்கள் வன்முறையாளர்களின் தாக்குதலுக்குஇலக்காகி வருகின்றன.



இந்நிலையில் எகிப்தில் நேற்று முன்தினமும் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்தது. தலைநகர் கெய்ரோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தைக் குறிவைத்து அங்குள்ள இளைஞர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கூடினர். இதனையடுத்து அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கும், வன்முறையாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

தூதரகத்தை நோக்கி கற்கள் வீசப்பட்டன. தூதரக சுற்றுச்சுவரின் ஒருபகுதியை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்த கும்பல் அங்கு ஏற்றப்பட்டிருந்த அமெரிக்க கொடியை இறக்கியது.

முன்னதாக இதே பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வன முறையில் 224 பேர் காயமடைந்தனர். இவர்களில் பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மக்கள் தங்கள் எதிர்ப்பை அமைதியாகத் தெரிவிக்க வேண்டுமென எகிப்து ஜனாதிபதி முகமது மோர்ஸி கேட்டுக் கொண்டுள்ளார். தொழுகையை முடித்துக் கொண்ட பின்பு, மசூதிக்கு வெளியே வந்து மக்கள் அமைதி வழியில் போராட வேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

# தந்தையைத் தேடுபவர்களுக்கு நம்பிக்கை தரும் தகவல்

ஒரு குழந்தையின் அப்பாவை அறிமுகம் செய்வது அம்மா. ஆனால் அப்பா யார் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுபவர்கள் மரபணு சோதனை செய்து கொள்ளுங்கள் என்ற அறிவிப்புடன் நியூயோர்க் நகரை வலம் வந்து கொண்டிருக்கிறது ஒரு வாகனம்.

இந்த வாகனத்தில் மரபணு சோதனை நடத்துவதற்கான அனைத்து பரிசோதனை வசதிகளும் உள்ளன. நிபுணர்களும் தயாராக உள்ளனர்.

மரபணு சோதனை நடத்துவதற்காக, ஒரு நபருக்கு 32 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்படுகிறது. தினமும் நியூயோர்க் நகரின் முக்கிய சாலைகளை சுற்றி வரும்போது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள ஏதாவது ஒரு இடத்தில் இந்த வாகனம் நிறுத்தப்படுகிறது.ஏராளமான ஆண்கள், தங்கள் குழந்தைகளை அழைத்து வந்து இந்த குழந்தை தங்களுக்குப் பிறந்தது தானா? என்று பரிசோதனை செய்கின்றனர். அந்த ஆய்வு முடிவுகள் சில நாட்களுக்குப் பின்னர் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படுகிறது.

இதுபோன்ற சோதனை நடத்துவதற்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இது போன்ற சோதனைகள் மூலம் ஏராளமான தம்பதிகளிடையே தேவையற்ற மனக்கசப்பு ஏற்படுகிறது என்றும் சமூக ஆர்வலர்கள் புகார் கூறியுள்ளனர். அமெரிக்காவில் ஏற்கனவே விவாகரத்துகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் இது போன்ற சோதனைகளினால் குடும்ப வாழ்க்கையில் விரிசல்கள் அதிகம் ஏற்படும் என்றும் எச்சரிக்கின்றனர். ஆனால் ஒரு சிலரோ இதுபோன்ற மரபணு சோதனைக்கு வரவேற்பு அதிகரிக்கிறது என்று தெரிவித்துள்ளனர்.

## மிரட்டுகிறது எரிமலை கிராமவாசிகள் தப்பியோட்டம்



வட அமெரிக்காவில் உள்ள கவுதமலா நாட்டில் 'பியூகோ' என்ற இடத்தில் மிகப்பெரிய எரிமலை உள்ளது.

அந்த எரிமலை வெடித்து சிதறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது பயங்கர சத்தம் எழுப்பி வரும் அதிலிருந்து சாம்பலும், புகையும் வெளியாகிறது.

எனவே, அது எந்த நேரத்திலும் வெடித்து சிதறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது நெருப்பு குழம்புடன் பாறைகள் தூக்கி வீசப்படும். இது சுமார் 1000 மீற்றர் உயரத்துக்கு எழும்பும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, பியூகோ எரிமலைய்யை சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் சுமார் 1 இலட்சம் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கவுதமலா ஜனாதிபதி ஓட்டோ பெரஷ் மொலினா தெரிவித்துள்ளார்.

# தூதரகத் தாக்குதலின் பின்னணி என்ன? முளைவிடுகிறதா அல்கொய்தா

லிபியாவில் அமெரிக்க தூதரகத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தியது அல்கொய்தா என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில், இது தொடர்பான விசாரணைக்கு அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த காப்டிக் குழுமம் வெளியிட்ட திரைப்படம் ஒன்றில் இஸ்லாம் குறித்து விமர்சிக்கப்பட்டு இருந்தது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு, கெய்ரோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டு முஸ்லிம்கள் 2 நாட்கள் முன்பு போராட்டம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து லிபியாவின் பெங்காசி நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்திலும் பய்ங்கர தாக்குதல் நடத்தப்பட்டது.

சரமாரியாக ரொக்கெட், கையெறி குண்டுகள் வீசப்பட்டன. மர்ம கும்பல் ஒன்று துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில் தூதரகம் தீக்கிரையானது.

மேலும் லிபியாவுக்கான அமெரிக்க தூதர் கிறிஸ்டோபர் ஸ்டீபன் மற்றும் 3 ஊழியர்கள் பலியாயினர். இந்த தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதனையடுத்து 50 கமாண்டோக்களுடன் 2 அமெரிக்க போர்க் கப்பல்கள் லிபியா கடற்பகுதிக்கு அனுப்பப்பட்டன. இதற்கிடையில்; லிபியாவில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டதன் பின்னணியில் அல்கொய்தா இயக்கம் இருக்கலாம் என்றும் சந்தேகம் எழுந்தது.

இந்நிலையில் இதுதொடர்பாக தீவிர விசாரணை நடத்த எப்.பி.ஐ. உள்ளிட்ட ஏஜென்சிகளுக்கு அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுபற்றி அமெரிக்க வெளிவிவகாரத் துறை செய்தி தொடர்பாளர் விக்டோரியா நுலண்ட் கூறுகையில், உலகின் எந்த இடத்தில் அமெரிக்கர்கள், அமெரிக்க அதிகாரிகள் பலியானாலும் அமெரிக்கா விசாரணை நடத்துவது வழக்கம்.

லிபியாவில் தூதரகத்தை குறிவைத்து அல்கொய்தா அல்லது அல்கொய்தா ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினார்களா என்று யூகத்தின் அடிப்படையில் விசாரணை நடைபெற உள்ளது. தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை எப்.பி.ஐ. தொடங்கியுள்ளது. விசாரணையில் உண்மை தெரியும் என்றார்.

தாக்குதல் தொடர்பாக லிபியா அரசும் தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது. இதே போன்று வங்க தேசம், ஈரான், மொராக்கோ, சூடான், துனுஷியா ஆகிய நாடுகளிலும் அமெரிக்காவுக்கு எதிராக கலவரம் நடந்து வருகிறது. இதுவரை 9 நாடுகளில் கலவரம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வெடி மருந்துப் பதுக்கல் சந்தேகத்தில் ஐவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதியில் சி-04 ரக வெடி மருந்து மற்றும் குண்டுகள் வைத்திருந்தார்கள் என்ற குற்றத்திற்காகச் சந்தேகத்தின் பேரில் ஐந்து பேரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து சி-04 ரக வெடிமருந்து 950 கிராம் மற்றும் ஐந்து குண்டுகளும் மீட்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தகவலகள் தெரிவித்தன.

விசாரணையின் பின்னர் சிலர் சட்ட நடவடிக்கைக்காக கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை கனகராஜன் குளம் பகுதியில் ரி-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 16074 ரவைகளும், மாங்குளம் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

மேலும் கடந்த 3 ஆம் திகதி முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் இருந்து குண்டுகள் - 39 வெளிச்சக் குண்டுகள் - 02 என்பனவும் முல்லைத்தீவுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (பா)

# வட்டக்கச்சியில் போலிப் புலனாய்வாளர்கள்

இராணுவப் புலனாய்வாளர்களெனக் கூறிப் பொதுமக்களது உடமைகளைக் களவாடும் கும்பலொன்று வட்டக்கச்சிப் பகுதியில் செயற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இரும்பு, மரம் என்பவற்றைத் தென்பகுதிக்குக் கொண்டு செல்லுதல், மற்றும் பல்வேறு குற்றச் செயலுடன் தொடர்புடைய நபர் தொடர்பாக இராணுவப் புலனாய்வாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது குறித்த நபர் தமது பிரிவைச் சேர்ந்தவரில்லையென உறுதி செய்துள்ளனர்.

இவ்வாறு வன்னிப் பகுதியில் நடமாடுபவர்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்கும்படி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேவேளை இவ்வாறான நபர்கள் குறித்துப் பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார். (69)

# சட்டவிரோத மரக்கடத்தல் சந்தேகத்தில் 8 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வவுனியா செட்டிகுளம் பகுதியிலும், கனகராயன்குளம் பகுதியிலும் கடந்தவாரம் சட்டவிரோதமாக மரங்களை வெட்டி அவற்றை வேறு இடங்களுக்குக் கடத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் எட்டுப்பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டவிரோதமாக முதிரை மரங்களை வெட்டிக்கொண்டிருந்த நபர் ஒருவர் மரம் வெட்டும் கருவியுடன் வவுனியா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் வசமிருந்த ஒரு தொகுதி மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கனகராயன் குளம் பகுதியில் இவ்வாறு மரங்களை வெட்டிக்கொண்டிருந்த ஐந்து பேரை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் வசமிருந்த மரக்குற்றிகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த வியாழக்கிழமையும் கனகராயன் குளம் பகுதியில் இருவர் காட்டு மரங்கள் வெட்டியமை தொடரபில் பொலிஸாரினால் கைதுசெயயப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வவுனியா நீதிமன்றில் நிறுதப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# ஹட்ரிக் விருதுகளை வென்றார் சங்கக்கார




(கொழும்பு)

சர்வேதேச கிரிக்கெட் சபையின் ஹட்ரிக் விருதுகளை இலங்கை அணியின் முன்னாள் அணிக் கப்டன் குமார் சங்கக்கார பெற்றுக்கொண்டார்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஆண்டு தோறும் சிறந்த கிரிக்கெட் வீரர்களை தேர்வு செய்து விருது வழங்கி வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. கிரிக்கெட் விருது வழங்கும் விழா கொழும்பு நகரில் நேற்று இரவு நடைபெற்றது. இலங்கையின் முன்னாள் கப்டன் சங்ககாராவுக்கு இந்த ஆண்டின் சிறந்த வீரர் மற்றும் டெஸ்ட் போட்டியின் சிறந்த வீரர் மற்றும் மக்கள் நாயகன் விருது என மூன்று விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் ஒருநாள் போட்டியின் சிறந்த வீரருக்கான விருது இந்தியாவின் இளம் வீரர் விராட் ஹோலிக்கு வழங்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு சர்வதேச ஒருநாள் போட்டியில் அறிமுகமான விராட் ஹோலி, 3886 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

கடந்த 12 மாதங்களில் அவர் 31 போட்டிகளில் விளையாடி 8 சதம், 6 அரைச் சதங்களுடன் 1733 ரன்கள் (சராசரி-66.65) விளாசினார்.

வளர்ந்து வரும் வீரருக்கான விருது மேற்கிந்தியத்தீவு அணியின் சுனில் நரைனுக்கு வழங்கப்பட்டது. சிறந்த ருவென்ரி - 20 வீரருக்கான விருதை தென்னாபிரிக்காவின் ரிச்சர்ட் லெவி பெற்றுள்ளார்.

அத்துடன் இந்த ஆண்டின் சிறந்த நடுவருக்கான விருது இலங்கையைச் சேர்ந்த குமார் தர்மசேனாவுக்கு வழங்கப்பட்டது.

இதேவேளை, சிறந்த கிரிக்கெட் ஆட்ட உணர்வுக்கான விருது நியூஸிலாந்து. வீரர் டானியல் விட்டோரிக்கு வழங்கப்பட்டது.

# புலிகளைத் தோற்கடிக்க பாகிஸ்தான் பெரும் உதவி

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானின் ஆதரவும் உதவியும் இல்லாமல் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்திருக்க முடியாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நேற்று பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் உண்மையான நண்பன் என்பதை பாகிஸ்தான் நிரூபித்துள்ளது. பாகிஸ்தான் மீது எமது மக்களுக்கு எப்போதும் ஆழமான அன்பு உள்ளது. மூன்று பத்தாண்டுகளாக தொடர்ந்த உள்நாட்டுப் போரின்போது, பாகிஸ்தான் தொடர்ச்சியாக இலங்கைக்கு ஆதரவளித்து வந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான தெளிவான புரிந்துணர்வு, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இருதரப்பும் பிராந்திய, பூகோள விவகாரங்களில் நெருங்கிச் செயற்பட வழி செய்துள்ளது. என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



கொமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக 22 பேர் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## போலி நகை...

போது அவை போலியானவை (கவரிங்) என்பது தெரியவந்திருக்கிறது. இதனை அடுத்து மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைக் குறித்த வங்கியினர் பதிவுசெய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் வேறு பகுதியில் மறைந்திருப்பதன் காரணமாக கைது செய்யப்படவில்லை என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.(பா)

## சாட்டி...

அனுப்பிப் பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறும், எதிர்வரும் 24 ஆம் திகதி வரை சடலம் அடையாளம் காணப்படாதவிடத்து அதன்பின் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டார். (85)

## கிழக்கில்...

அடிபணிய வேண்டியிருந்தால் எப்பொழுதோ நாங்கள் அதனைச் செய்திருப்போம். ஆகையால் கிழக்கு மாகாணசபை விடயத்திலும் எங்களுக்கு பதவி ஆசைகாட்டி பணியவைக்கலாம் என சில சக்திகள் முயற்சிக்கின்றன. ஆனாலும், அது ஒருபோதும் நடைபெறாது. முஸ்லிம் காங்கிரஸின் வாக்குறுதியை நம்பி ஜனநாயக ரீதியில் வாக்களித்த முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை முஸ்லிம் காங்கிரஸ காப்பாற்ற வேண்டும். முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது தேர்தல் பிரசாரங்களில் பல வாக்குறுதிகளை அள்ளி வீசினார். வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது வெட்கக்கேடானது என்றும் கூறியிருந்தார். மொத்தத்தில் அரசுக்கு எதிராக பிரசாரத்தினை மேற்கொண்டுதான் 7 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது முஸ்லிம் காங்கிரஸ். அரசுக்கெதிரான பிரசாரங்களை நம்பி ஜனநாயக ரீதியில் வாக்களித்த முஸ்லிம் மக்களை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் கைவிடக்கூடாது. முஸ்லிம் மக்களின் ஜனநாயக ரீதியான அபிலாசைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் வழிவிட வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்று மேலும் கூறினார்.

## சமஷ்டி...

விரைவில் ஏற்படுத்த வேண்டும். அதற்கு சகல இனங்களும் ஒன்றுபட்டு பேச்சு நடத்தவேண்டும்.

அரசுக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுக்களில் ஏற்பட்ட தேக்கநிலை நீக்கப்பட்டு விரைவாக பேச்சு நடத்த வேண்டும். இந்தப் பேச்சுக்களில் சகல இனங்களும் பங்குபெற வேண்டும்.

இரண்டாவது, மனித உரிமை நிலைமை மேம்பட வேண்டும். மனித உரிமை நிலைமையை மேம்படுத்த நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்த சிபார்சுகள் விரைவில் நடைமுறைக்கு வர வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவால் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவால் கொண்டு வரப்பட்ட விசாரணைக்கு சுவிஸ் ஆதரவு வழங்கியது. அதன் மூலம் சுவிஸின் நிலைப்பாட்டை இலங்கைக்கு தெரிவித்தோம்.

எமது தூதரகம் மூலமும் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு மூலமும் எமது நிலைப்பாட்டை இலங்கைக்கு தெரியப்படுத்தி வருகிறோம். இலங்கை விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தை கொண்டு வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இலங்கை நிலைவரங்களை மதிப்பீடு செய்ய ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு இலங்கைக்கு செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம். அந்தக் குழு அங்கு செல்ல அனுமதியை இலங்கை மறுத்து வந்தது. இப்போது அந்தக் குழு அங்கு செல்ல இலங்கை அனுமதி வழங்கியதை நாம் வரவேற்கிறோம்.என்றார்.

## காணாமற்போதல்...

கலாநிதி மஹாநாம தெரிவித்துள்ளார். 2012 ஜனவரி முதல் 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதிவரையில் இடம்பெற்ற 37 காணாமல்போன சம்பவங்கள், மற்றும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவர் விளக்கினார்.

மேலும் மூன்று காணாமல் போதல் சம்பவங்கள் குறித்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. ஆனால் அந்நபர்கள் சட்டவிரோதமாக மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்துவிட்டனர் என்பதை நாம் கண்டறிந்தோம். மற்றொரு முறைப்பாடு பின்னர் வாபஸ்பெறப்பட்டது என அவர் கூறினார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அதிகாரிகள் ஒருபோதும் புள்ளி விபரங்களைக் கேட்கவில்லை எனவும் அவர்கள் காணாமல்போன சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்தே கேட்டனர் எனவும் பிரதீப மஹாநாம தெரிவித்தார் ஊடக சுதந்திரம் அருகிவருகிறதென்ற முறைப்பாடு குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பியதகாவும் மஹாநாம கூறினார்.

எனினும், தாம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக வரவில்லை எனவும் உண்மை கண்டறிவதற்கான பயணமொன்றையே மேற்கொண்டுள்ளதாகவும் அவ் அதிகாரிகள் திட்டவட்டமாக கூறியதாக மஹாநாம தெரிவித்தார். இலங்கையில் மனித உரிமைகள் நிலைவர மதிப்பீட்டையே அவர்கள் மேற்கொள்வர் என அவர் கூறினாா.

## கிழக்கில் ஆட்சி...

செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். மாகாண சபைக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் நாளையதினம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படலாம் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

# அமெரிக்கத் தீர்மானத்தை தோற்கடிக்கத் தீவிர முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டமீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தக் கோரி அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு அரசாங்கம் ஆதரவு திரட்டி வருகிறது.


அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் இணைந்து கடந்த 7 ஆம் திகதி இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போதும் அதற்குப் பின்னரும் இருதரப்பினராலும் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், மற்றும் ஏனைய மனிதஉரிமை மீறல்கள் குறித்தும் சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஐ.நா உருவாக்க வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊடகசுதந்திரம் மற்றும் மனிதாபிமான அமைப்புகளுக்கு அனுமதி அளிப்பது, முன்னாள் போராளிகளுக்கான மறுவாழ்வு உள்ளிட்ட விவகாரங்களில் அனைத்துலகத் தலையீட்டை இது வலியுறுத்துகிறது. அத்துடன் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மூலம் அரசியல்தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பிரேரணையைத் தோற்கடிக்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் உள்ள இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசாங்கம் கோரியுள்ளது. இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள, இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாரட்ண அமுனுகம, இந்தப் பிரேரணையைத் தோற்கடிக்க ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வொஷிங்டனில் உள்ள தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

# முல்லைக்கு சுற்றுலா சென்ற கைதடி வாசிகள் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் இருந்து முல்லைத்தீவுக்குச் சுற்றுலா சென்ற பயணிகள் மினி பஸ் ஒன்று ஏ-9 வீதியில் பளை தர்மக்கேணிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 07 பேர் காயமடைந்து கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் வேகமாகப் பயணித்த மினி பஸ் எதிரே இருந்த நிர்மாணப்பணிகள் பூர்த்தியடையாத பாலமொன்றின் பகுதியில் விபத்துக்குள்ளாகி கவிழ்ந்ததாகத் தெரியவருகின்றது.

இந்த விபத்தில் மினிபஸ் பலத்த சேதங்களுக்குள்ளது.(பா)

# இரண்டு போனஸ் ஆசனங்களில் கிழக்கில் தமிழர் ஒருவர் நியமனம்

(மட்டக்களப்பு)

கடந்தவாரம் கிழக்கு மாகாண சபைக்கு நடைபெற்ற தேர்தலில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இரு போனஸ் ஆசனங்கள் உட்பட 15 ஆசனங்கள் கிடைத்தன. அந்த இரு போனஸ் ஆசன உறுப்பினர்களாக தமிழர் ஒரு வரும், சிங்களவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக கிழக்கு மாகாணசபையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் 13 ஆக அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாணசபைக்கு நடைபெற்ற தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 11 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் ஒருவருமாக 12 தமிழ் உறுப்பினர்கள் தெரிவாகினர்.

அத்துடன், 15 முஸ்லிம்களும், 8 சிங்களவர்களும் தேர்தல் மூலம் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், கிழக்கு மாகாண சபைக்கான போனஸ் ஆசனங்களின் மூலம் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால், தமிழர்களின் பிரதிநிதித்துவம் 13 ஆகவும், சிங்களவர்களின் பிரதி நிதித்துவம் 9 ஆகவும் அதிகரித்துள்ளது.

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களுக்கு போனஸ ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து துரையப்பா நவரட்ணராஜாவும், அம்பாறை மாவட்டத்தில் இருந்து ரி.எம்.ஜெயசேனவும் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்க ஆதரவு தர வேண்டுமானால், அந்தக் கட்சி பெற்றுக் கொண்ட இரண்டு போனஸ் ஆசனங்களில் ஒன்றை தமக்குத் தரவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நேர்முகத் தேர்வில் 200 பட்டதாரிகள்

2010, 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பட்டம் பெற்றவர்களை பட்டதாரிப் பயிலுனர் நியமனத்தில் உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வில் 200 பேர் தோற்றியுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலரின் அறிவுறுத்தலுக்கு இணங்க 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அங்கிகரீக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

நேர்முகத்தேர்வில், பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், மருதங்கேணி, சாவகச்சேரி, உடுவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு நேற்றும், யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய் சங்கானை, காரைநகர், நெடுந்தீவு ஊர்காவற்துறை, வேலணை போன்ற பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு 'இன்றும் நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

தெரிவாகும் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்கள் வழங்கப்படுமெனவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# 280 இந்துக் கோயில்கள்; முல்லையில் சேதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்து கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 280 இந்துக்கோயில்கள் யுத்தம் காரணமாகச் சேதமாகியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மோகனராஜன் தெரிவித்துள்ளார்.

இவற்றுள் மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் 22 கோயில்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த 78 கோயில்களுக்கான ஒதுக்கீடு தொடர்பான அறிக்கை இந்து காலசார அமைச்சின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் 78 இந்துக் கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கான நிதி நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வேதநாயகனுக்கு இந்து கலாசார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மோகனராஜன் தெரிவித்தார். (02)

# 'குழந்தை' விற்பனை; மாட்டினர் இருவர்

ஒரு நாள் குழந்தை ஒன்றைப் பிரசவித்த பெண் ஒருவரிடம் இருந்து குழந்தையை வாங்கியவரும், அதற்கு உதவியவரும் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை பாஷையூரில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் தீவுப்பகுதி அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு குழந்தையை விற்க முயன்றுள்ளார். இவர் தற்சமயம் தலைமறைவாகியிருப்பதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்துக் கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்படவுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. (பா)

# தேவை

## வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை
5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு
9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம்
12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தி யாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

வன்னிப் பிரதேச செய்தியாளர்,
தினமுரசு,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.




சங்கானையில்

எமது புதிய
பிரமாண்டமான காட்சியறை

இன்று முதல்

நீங்களும் இளைய தலைமுறையின்
தனித்துவமான வடிவங்களை ரசித்துக்கொள்ள
எமது பயணத்தில் இணைந்து கொள்ளுங்கள்




சரவணா ரெக்ஸ் 04

இல.219, பிரதான வீதி, சங்கானை.

(HNB வங்கி முன்பாக)

தொ.பேசி: 021 225 0909

(C/1868)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.